பக்கங்கள்-16 30.ஐப்பசி.2022 விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –387

## குமுளமுனை குருந்தூர்மலை விவகாரம்
## பௌத்த பேரினவாதிகளின் அத்துமீறிய செயற்பாடு

து.ரவிகரன்


## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் தமிழ் தரப்பு ஒன்றிணைய வேண்டும்

## வட-கிழக்கில் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள போதைப்பொருள் விவகாரம்



# குமுளமுனை குருந்தூர்மலை விவகாரம் – பௌத்த பேரினவாதிகளின் அத்துமீறிய செயற்பாடு

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் அவர்களுடனான நேர்காணல்







கேள்வி: குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாக பல்வேறுப்பட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றது. தீவிர செயற்பாட்டுடன் நீங்கள் செயற்ப்பட்டு இருந்தீர்கள். அது தொடர்பில் உங்களுக்கு எதிரான வழக்குகளும் முறைப்பாடு செயப்பட்டுள்ளன. இவ்வாறு ஒரு நில ஆக்கிரமிப்பு குறிப்பாக ஏற்ப்படுத்தப்பட்டிருகின்றது. இந்த நில ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பாகவும் உங்களுடைய நிலைப்பாடு எவ்வாறு இருக்கின்றது.

பதில் : குருந்தூர் மலை என்பது எமது பூர்வீக ஆதிகாலத்தில் இருந்து எங்களுடைய தமிழ் மக்களுடைய வழிப்பாட்டு இடமும் அந்த குருந்தூர் மலை ஆதி சைவநாயகம் கோயில் இருந்த இடத்தை சுற்றி வர ஏராளமான வயல் நிலங்கள் குருந்தூர் மலையொட்டிய வயல் நிலம் கிட்டத்தட்ட அந்த வயல் நிலத்தில் இருந்து 13கிராமங்களுக்கு அந்த வயல் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கிட்டத்தட்ட 56ஆம் ஆண்டு என்று சொல்கின்றார்கள் 50ஆம் ஆண்டு என்றும் சொல்கின்றார்கள். அந்த காலப்பகுதியிலே இந்த வயல் நிலங்கள் கொடுக்கப்பட்டு இருந்தது. அத்தோடு ஆதிசிவஐநார் ஆலயத்தை வழிப்பட்டதற்கான சான்றுகள் என்று சொல்லி ஏராளமாக இது தமிழருடைய இடம் பூர்வீகம் ஆனால் இப்பொழுது பௌத்த மதத்தை திணிக்கும் நோக்கத்தோடு அங்கு வந்து எங்களுடைய வழிப்பாடுகளையும் தடை செய்து இப்படியான ஒரு தங்களுடைய மதத்தை திணிக்கும் நோக்கத்தோடு பௌத்த மதத்தை திணிக்கும் நோக்கத்தோடு நீதிமன்ற தீர்ப்புக்களையும் புறந்தள்ளி தொல்லியல் திணைக்களமும் சரி பௌத்த பிக்குமாறும் சரி அந்த இடத்தில் மிக கடுமையான வகையில பௌத்தமதத்தை திணிப்பதற்கான வேலைகள் செய்து கொண்டு வருகின்றார்கள்.

நாங்கள் ஜனநாயக ரீதியாக எங்களுடைய இனம், மதம், மொழி, உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் நாங்கள் போராடும் போதும் கூட அவர்கள் முறைப்பாடு செய்தார்கள் பொலிஸ் நிலையத்திற்கு தொல்லியல் திணைக்களம் முறைப்பாடு செய்தாள் உடனடியாக எங்களை கைது செய்கின்றார்கள். அதே மாறி பிக்குமார்கள் முறைப்பாடு செய்தாலும் எங்களை நீதிமன்றம் காண கொண்டு செல்கின்றார்கள். அந்த வகையிலே இப்பொழுது 4வழக்குகள் குருந்தூர் மலைக்காக எங்கள் மேல் திணிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 4 வழக்குகளின் இலக்கங்களை சொல்லுகின்றேன். 2018ஆம் ஆண்டு போடப்பட்ட வழக்கு அந்த வழக்கு ஏ.ஆர் 673 இலக்கம் கொண்டது அதை நாங்கள் தாக்கல் பத்திரம் மூலம் கடந்த 16.06.2022 இல் போடப்பட்ட வழக்கு ஏர்.ஆர் 378 2022 இது தவிர எங்களை பொலிஸார் அழைத்து தொல்லியல் திணைக்களம் வழக்கு தொடுத்ததாக சொல்லி எங்களை கைது செய்யப்பட்ட வழக்கு என்பது பி1053 2022, அது தவிர பிக்குமார் தங்களுடைய வழிப்பாட்டை தடுத்ததாக 21.09.2022 ஒரு ஜனநாயக ரீதியான ஒரு போராட்டத்திற்கு 150க்கு மேல திரண்டு அதை தடுத்தற்காக 3பேரை வழக்கிற்கு வர சொல்லி இருக்கின்றார்கள். எதிர் வரும் 11மாதம் 10ஆம் திகதி பிக்குமார் முறைப்பாடு செய்யதாக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்து அல்லது பிக்குமார் வழக்கு தாக்கல் செய்து அதற்கான கட்டளையுடன் நீதிமன்றத்தால் எங்களுக்கு வந்திருக்கின்றது. பி 688 22 இப்படி ஒரே வழக்காக எங்கள் மேல் போட்டு குருந்தூர் மலை எங்களுடைய சொந்த இடம் என்று சொல்லி நாட்டிலே நாங்கள் எங்களுடைய உரிமைக்காக மொழிக்காக மற்றது மத உரிமைக்காக எங்களுடைய நிலத்தினுடைய உரிமைக்காக நாங்கள் ஜனநாயக வழியிலே போராட்டங்களை போராடுவதற்கு கூட அரசாங்கத்தினுடைய திட்டமிட்ட திணைக்களங்கள் அதாவது உங்களுக்கு தெரியும் வன ஜீவராசிகள் திணைக்களம், வனளாக திணைக்களம் மற்றது தொல்லியல் திணைக்களம் என்ற வகையில இந்த திணைக்களங்கள் எல்லாம் சேர்ந்து எங்களுடைய மக்களுடைய வாழ்வாதாரத்தையும் ஒடுக்கி எங்களுடைய நிலம்.மதம்.மொழி அத்தனையும் ஒதுக்க வேண்டிய நிலையில் தான் இப்பொழுது செயற்ப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் தான் குருந்தூர் மலையானது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்னிடம் இருக்கின்றது. கடந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு 14.07.2022 அன்று சரவணராஜ நீதவான் நீதிமன்றம் முல்லைதீவு, அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டு அதனுடைய அறிக்கை என்னிடமும் இருக்கின்றது. நீதிமன்றத்திலே எடுக்கலாம். உங்களுக்கு தெரியும் அந்த அறிக்கை இருக்கின்றது. அந்த அறிக்கையின் படியும், பிறகு 21 சட்டமா திணைக்களத்தால் தொல்லியல் திணைக்களத்தின் சட்டதரணிகளும் வந்து நகர்த்தல் பத்திரம் மூலம் 2022.07.19ஆம் திகதியன்று நகர்த்தல் பத்திரம் மூலம் வழக்குதாக்கல் செய்து நீதிபதி அவர்களை குருந்தூர் மலைக்கு அழைத்து சென்று அங்கு இந்த இடங்கள் எல்லாம் பார்வையிட்டு வந்து தீர்ப்பையும் சரி . தீர்ப்புக்களை புறக்கணித்து செயற்படுகின்றார்கள். முல்லை தீவு பொலிஸார் அதை கண்காணிக்க வேண்டியவர்கள் கண்காணிக்கவில்லை. அல்லது அவர்களும் சேர்ந்து மற்றது தொல்லியல் திணைக்களத்தை அந்த தீர்ப்புக்கு மதிப்பு கொடுக்கவில்லை. அல்லது பிக்குமார் தங்களுடைய வழிப்பாட்டை செய்ய வேண்டும் என்பதில் முனைப்போடு இருக்கின்றார்கள். அதே நேரத்தில் சைவ வழிபாடுகளுக்கான இடங்கள் கூட அழிக்கப்பட்டுவிட்டன. இப்படியான நிலைமை தான் மோசமாக நடந்து கொண்டிருக்கின்றது என்பதை சொல்லுகின்றேன்.

கேள்வி : இதிலே ஒரு விடயம் என்னவென்றால் அதிலே குறிப்பாக அவர்கள் எந்த ஆதாரத்தை கொண்டு அங்கு அந்த சிலையை பௌத்த கோயிலை அமைக்கின்றார்கள் என்பதற்கான சில விடயங்களை குறிப்பிட்டு இருந்தார்கள். இது உண்மையா?

பதில் : அந்த பௌதிக விடயங்கள் அரசாங்கம் நினைத்தால் எங்களுடைய மகாவலி எல்ல என்ற போர்வையில ஆமையங்குளம் மரிஞ்சிகட்டயங்குளம் முந்திரியகுளம் என்று சொல்லி குளங்களுடைய பூர்விகமாக எங்களுடைய மக்கள் வயல் விதைத்து அந்த 84ஆம் ஆண்டு 12மாதம் அந்த பகுதிகளில் இருந்து கொப்பளாய் கொக்குதரவாய் கருணாட்டி கேணி பகுதிகளில் இருந்து வெளியேறும் போது அந்த பயிர் வந்த நிலைமையில் அறுவடைக்கான காலம் நெருங்கி கொண்டிருந்த நேரங்களில் இராணுவத்தினருடைய அழுத்தத்தினால் எல்லோரும் இடம் பெயர்ந்தது உங்களுக்கு தெரியும் அந்த இடம்பெயர்ந்த இடையில் இருந்த காணிகள் கூட 2010ஆம் ஆண்டு 2011ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போது சிங்களவர்களுடைய கையில் தான் அந்த காணிகள் இருந்தது. அதற்காக மைக்குளம் என்ற இடத்தில் மஹிந்தராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த நேரம் அவருடைய பிரதிநிதி ஒருவரால் மைக்குளம் என்ற இடத்தில் வைத்து சிங்கள மக்களுக்கு அனுமதிபத்திரங்கள் வழங்கப்பட்டது.

ஏற்கனவே தமிழர்களிடம் காணிக்கான அனுமதிப்பத்திரங்கள், காணிக்கான உறுதிகள் எல்லாம் இருக்கும் போதும் கூட ஒரே காணிக்கு அடுத்த 2வது பத்திரத்தை கொடுத்து அவர்களுக்கு சொந்தமாக்கி கொண்டார்கள். குறிப்பாக ஆமையங்குளம்.முத்திரியங்குளம்.மரிஞ்ச் சிகட்டியங்குளம் அப்படியான குளங்களின் பெயர்களை கூட இது எங்களுடைய மக்களுக்கு சொந்தமாக தமிழ்மக்களுக்கு ஆணையங்குளத்தில அந்த நேரத்தில் 73பயனாளிகள் முந்திரியங்குளத்தில அந்த நேரத்தில 68பயனாளிகள் மரிஞ்சிக்கட்டி குளத்தில அந்த நேரத்தில 45பயனாளிகள் இப்படி சொந்தமாக இருந்த இடத்தை கூட சிங்கள மக்களுக்கு வழங்கி இன்று முழுமையாக சிங்கள மயமாக காட்சியளிக்கின்றது. அதே போல் தான் இவர்கள் அரசாங்கம் நினைத்தால் உறுதியும் வழங்குவார்கள், போமிற்றும் வழங்குவா்ாகள் எல்லாம் தங்களுடையது என்று வர்த்தமானியிலும் பிரசுரிப்பார்கள்.

ஆனால் இந்த குருந்தூர் மலை என்பது எங்களுடைய ஆதிசிவன்ஐயனார் கோயில் வழிப்பாட்டு இடமும் அதனை சுற்றி இருந்த குளமும் சரி அதனை சுற்றி இருந்த வயல்நிலங்களும் சரி ஒரு சிங்களவருக்கு அந்த இடங்களில் காணி இல்லை என்பதை ஒரு புத்தபிக்குகளின் ஆதாரம் அங்கு இல்லை என்பதையும் இப்பொழுது திணிக்கின்றார்கள் என்பதையும் தான் நான் சொல்ல முடியும்.

கேள்வி : இதிலே குறிப்பாக மறவன்புலவு சிவசேனயனுடைய இலங்கையில் இருக்க கூடிய தலைவர் மறவன்புலவு சச்சியானந்தன் மற்றும் அரசாங்கத்தின் சார்பான சிலரும் அதிலே கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். அந்த காலக்கட்டத்திலே அங்கு அந்த பௌத்தவழிபாடு இந்துக்களோடு சேர்ந்து இருந்ததாக கூறியிருந்தார்கள். இவர்களுடைய கருத்திற்குரிய பதில் என்ன?

பதில் : இந்துகளோடு பௌத்தவழிபாடு இருந்தது என்பதை நாங்கள் ஏற்க முடியாது. ஏனென்றால் மறவன்புலவு சச்சியானந்தம் அவர்கள் ஒரு முறை விட்ட அறிக்கை நான் உடனடியாக அங்கு சென்று சசிகுமார் அந்த நிர்வாகத்தினுடைய தலைவர் விட்ட அறிக்கை ஏற்கனவே ஊடகங்களில் வந்தது நான் உடனடியாக சென்று சசிகுமார் அவர்களிடம் கேட்டபொழுது தான் அப்படி ஒன்றும் சொல்லவில்லை என்று எழுத்துப்பட எனக்கு எழுதி தந்தார். இப்படியாக ஒரு உண்மைக்கு புறம்பான வகையில் நான் யார் என்று சொல்ல மாட்டேன் அவர்களுக்கு தான் தெரியும். அரசாங்கத்தினுடைய செயற்பாடுகளை உண்மை என்று சொல்லிக்கொண்டு திணித்துக்கொண்டிருப்பவர்கள் மத்தியிலே உங்களுக்கு தெரியும் சாதாரணமான என்ன விடயம் என்றால் எங்களுடைய வரலாற்று ஆசிரியர்கள் இந்த இடத்தில் குருந்தூர் மலையில் வந்து ஆய்வுகள் செய்ய வெளிக்கிட்டவுடன சிவலிங்கம் வெளிப்பட்டதாகவும் அது வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பாக பத்மநாதன் யாழ்ப்பாண ஆசிரியர் அவர்களுடைய அறிக்கையை நான் பார்த்திருந்தேன் அதே போல பலரும் சொல்லியிருந்தது 2300ஆண்டுகளுக்கு முற்ப்பட்ட பழமையான லிங்கம் தான் இது என்றும் அது உண்மையாக சிவலிங்கம் தான் என்றும் ஆதாரங்களோடு அவர்கள் வெளிப்படுத்தி இருந்தார்கள். இது நாங்கள் வந்து ஒரு 100வருசம் 200வருசம் என்று கதைகள் சொல்லுவது இல்லை.

இது 2300 ஆண்டுகளுக்கு முற்ப்பட்ட ஆதிசிவனுடைய லிங்கம் என்று அவர்களே உறுதிப்படுத்தியிருந்தார்கள். இப்படியிருக்கும் போது இவர்கள் இப்பொழுது அரசாங்கத்தோடு இணைந்துக்கொண்டு சில சாட்டுபோக்கு சொல்லிக்கொண்டு தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கின்ற ஆக்கள் இப்படியான கருத்துக்களை எப்படி நாங்கள் ஏற்றுக்கொள்வது இப்படியான கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. வரலாற்றாசியர்கள் இப்பொழுதும் இருக்கின்றார்கள். அவர்களிடம் போயிட்டுகேளுங்கோ அந்த லிங்கம் இப்பவும் இருக்கு ஆனால் எல்லாம் புத்த மதம் பௌத்தமயம் என்று சொல்லி இவர்கள் முழுமையாக எங்களுடைய மதத்தை அழிக்கும் வேலையை தான் செய்துக்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் நீதிபதி அவர்களோடு அந்த இடத்திற்கு சமூகமளித்த நேரத்திலே உண்மையிலே எங்களுடைய சைவ அடையாளங்கள் ஒன்றும் இல்லை எல்லாவற்றையும் அழித்து பழங்கற்களால் ஆன தங்களுடைய பௌத்தமதம் இருந்ததற்கான அடையாளங்களை அங்கு ஏற்ப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். பழங்கற்கள் போல கற்களை அரிந்து அதற்கான இன்னொரு வடிவத்தை 10வருசமோ 5வருசமோ அல்லது 20வருசமோ போக அதை கொண்டு தாக்குகின்றார்கள். இது பழையகாலத்து கற்கள் என்று அப்படியான ஒரு திட்டமிடலோடு திணிப்போடு அவர்களுடைய வேலை நடந்துக்கொண்டிருக்கின்றதே தவிர இது எங்களுடைய தமிழர்களுடைய பூர்விகம் என்பதை நாங்கள் மறுப்பதிற்கில்லை.

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## தொடரும் பௌத்தமயமாக்கல்

இலங்கை என்பது சிங்கள, தமிழ், முஸ்லீம்கள் பிரதான இனத்தவராக வாழும் ஒரு ஜனநாயக பன்மைத்துவ நாடு. இங்கு அனைவரும் சமம். ஆனைத்து இன மக்களின் கலை கலாச்சாரம் சமய பண்பாட்டு விழுமியங்கள் மதிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனினும் பௌத்த மதத்தைத் தழுவிய சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். வடகிழக்கினைப் பொறுத்தவரையில் தாயகமாகக் கொண்டு தமிழினம் பெரும்பான்மையாக வாழ்கின்றது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து அஹிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களின் பின்னர் இன்றும் தமிழினம் அரசின் அடக்குமுறைகளுக்குள் வாழவேண்டிய சூழல் தொடர்கின்றது. சிங்கள பேரினவாத அரசுகளின் அடக்குமுறைகளால் தான் தமிழினம் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டார்கள். ஆந்நிலை இன்றும் தொடர்கின்றது. யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்களைக் கடந்துள்ள இச்சூழலிலும், தமிழ் மக்கள் வீதியோரங்களில் தமது உரிமைகளுக்காக தாம் சந்தித்த இன்னல்களுக்கு தீர்வின்றி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள்.

தமிழர் பிரதேசங்களில் பௌத்தமயமாக்கல் என்பது சட்டவிரோதமானதும் ஜனநாயக கோட்பாடுகளுக்கு முரணானதுமாகும். பூர்வீகத்தாயகமாகக்கொண்டுஒரு இடத்தில் வாழ்ந்துவரும் மக்களை அப்புறப்படுத்தி, அவர்களை சின்னாபின்னமாக ஆக்குவதற்கு ஒப்பான செயலாகவுமே வடகிழக்கில் பௌத்தமயமாக்கலை நாம் பார்க்கிறோம். சிங்கள மக்கள் இல்லாத இடத்தில் அவர்களைக் கொணர்ந்து குடியமர்த்தும் நோக்கில் முற்கூட்டியே பௌத்த விகாரைகளை இரவோடிரவாக உருவாக்குவதும் புத்தரின் சிலைகளை நிர்மாணிப்பதும், அரச மரக்கன்றை நாட்டுவதும் உண்மையில் மனித குலத்தின் இழிவான செயலாகவே நாம் பார்க்கிறோம். சிங்கள பேரினவாத பௌத்த பிக்குகள் சிலர் அரசின் பூரண அனுசரணையில் பாதுகாப்புப் படையினரின் ஒத்துழைப்பில் இவ் மோசமான செயலை வடகிழக்கில் அரங்கேற்றி வருகின்றனர்.

ஆதிசிவன் குருந்தூர் மலை தொடங்கி, செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், வெடுக்குநாறி மலை, வலிகாமம் தையிட்டி, கிண்ணியா, கோனேஸ்வரம் எனப் பட்டியல் நீளுகின்றது. கிழக்கில் மேய்ச்சல் தரைகள் பறிபோகும் நிலை தொடர்கின்றது. வடக்கு கிழக்கில் நிலமட்டத்தில் இருந்து உயரமாக இருக்கும் சகல இடங்களிலும் பௌத்த அடையாளங்களை நிறுவி இருக்கின்றனர்.

தமிழர் நிலப்பகுதியில் தொடரும் இவ்வாறான அடக்குமுறைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஆடக்குமுறைகளால் தான் தமிழினம் போராட்டங்களை முன்னெடுத்ததும், அழிவுகளைச் சந்தித்ததும் என்பது உங்களுக்கு நினைவில் இருக்கும். எனவே மீண்டும் தமிழர் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து, இந்த நாட்டில் மீண்டும் அமைதியின்மையை உருவாக்கும் நிலையை ஏற்படுத்திவிடாதீர்கள் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

# 192 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



பார்வை மற்றும் றோடர் சாதனங்களைக் கொண்ட சிறப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட, .ரவிலும் பகலிலும் வானிலிருந்து புகைப்படம் பிடிக்கக்கூடிய புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்ட தனியானவிமானங்கள், உலங்குவானூர்திகள் போன்றவற்றினால் வழக்கமாக வான்வழி வேவு மேற்கொள்ளப்படுகின்றது.

முகவர்வழி வேவு நடவடிக்கை

கெரில்லாக்களையும் எதிர்பியக்க அமைப்பின் படைகளையும் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதான மூலங்களில் ஒன்றாக முகவர்வழி வேவு விளங்குகின்றது. இதன் போது எதிரியின் வேவுக்காரரைக் கண்டுக்கொள்ளல், அவர்களது செயற்பாடுகளை மட்டுப்படுத்தல், அழித்தல் போன்றன மாத்திரமல்லாமல், ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கானதும் கெரில்லா அமைப்புக்குள்ளும் தகவல் தருபவர்களை அனுப்புவதற்குமான சூழலைத் தோற்றுவித்தலும் அவசியமாகும்.

ஆட்களைச் சேர்த்துக்கொள்ளல், கெரில்லாக்களிடம் தங்களது முகவர்களை அனுப்புதல் போன்றவற்றுடன் சேர்த்து, இப்பிரிவு வேவு முறியடிப்பு மற்றும் பரப்புரைப் பிரிவினருடன் நெருங்கிய தொடர்போடு, கெரில்லாப் போராட்டத்தினதும் எதிர்பியக்க அமைப்பினதும் அத்திரவாதத்தைச் சிதறடிக்கும் நோக்கங்கொண்ட தீவிர செயற்பாடுகளையும் பெரியளவில் திட்டமிடுகின்றது.

இவ்வாறான நடவடிக்கை முறைகளில் ஒன்றாகப் போலிக் கெரில்லாப் படைப்பிரிவகளை உருவாக்குதல் விளங்குகின்றது. இவ்வாறான படைப்பிரிவுகள் தங்களைக் கெரில்லாக்கள் எனக் காட்டிக்கொண்டு பொதுமக்களிடத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பலாத்கார நடவடிக்கைகள், களவு,தீயிடல், பிரசித்திபெற்ற பொதுமக்களைக் கொலைசெய்தல் போன்ற செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளால் பொதுமக்களிடத்தில் கெரில்லாக்கள் பற்றிய அதிருப்தியைத் தோற்றுவிப்பதுடன், நாட்டில் கெரில்லா அமைப்பிற்கெதிராகச் சமரிடுகின்ற படைகளுக்கு ஆதரவு வழங்கும் நிலையையும் தோற்றுவிக்கவேண்டும். பிரதேச மக்களிலிருந்து சிறப்புப் படைப்பிரிவுகளைச் சேர்ந்த வீரர்களிலிருந்து போலிக் கெரில்லாப் படைப்பிரிவகள் உருவாக்கப்படலாம்.

வேவு முறியடிப்பு மற்றும் காவற்றுறை நடவடிக்கைகள் வேவுப் பிரிவு, காவற்றுறை, பிரதேச அதிகார சபைகள் போன்றவற்றுடன் வேவு முறியடிப்புப் பிரிவு நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்றது. கெரில்லாப் படைப்பிரிவுகளுக்கெதிரான நடவடிக்கைகளில் காவற்றுறை நேரடியாக பங்கெடுப்பதோடு, மறைமுகக் கெரில்லாக் குழுக்களுடனும் கெரில்லாக்களின் முகவர்களுடனும் சமரிடவேண்டியுள்ளது. அத்துடன், பொதுமக்கள் மீதான கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டிய, கெரில்லாக்களுடன் அவர்களுக்குரிய தொடர்பை மட்டுப்படுத்தவேண்டிய, பின்புலத்திலுள்ள முக்கிய இலக்குகளைக் காக்க வேண்டிய அமைப்பாகவும் இருக்கின்றது.

காவற்றுறை நிர்வாக நடவடிக்கைகளைப் பொதுமக்களையும் இராணுவப் படைகளையும் கூட்டாகக் கொண்ட பிற நடவடிக்கைகளோடு ஒன்றாக மேற்கொள்ளப்பரிந்துரைக்கப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளில் பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன.

பிரதேச மக்களது நடவடிக்கைகள் மீதான கட்டுப்பாடு. குறித்த பிரதேசத்தில் வசிக்கின்ற மக்கள் அனைவரையும் காவற்றுறை பதிவு செய்து கொள்கின்றதுடன், அவர்களை இணங்கான்பதற்குரிய அடையாள அட்டையையும் வழங்குகின்றது. ஒன்றுகூடல், கூட்டம் போன்றவாறானவற்றைத் தடுப்பதற்காக இடையிடையே ஊரடங்குச் சட்டங்களும் அமுற்படுத்தப்படுகின்றன. மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் மாத்திரம் சுயாதீன நடமாட்டத்திற்கு அனுமதிக்கப்படுகின்றது. இறுக்கமான தணிக்கை கொண்டுவரப்படுகின்றது. அனுமதிப் பத்திர முறையில் முக்கிய இடங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுகின்றது. தடைகளேதுமின்றி அனுமதிப்பத்திரம் பெற தகுதியுடைய தரத்திலுள்ள மக்கள் யாரெனத் தீர்மானிக்கப்படுகின்றது.

கெரில்லாக்களுடன் அல்லது அவர்களது அபிமானிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் மீது காவற்துறையும் வேவு முறியடிப்புப் பிரிவும் கடுமையான கண்காணிப்பை மேற்கொள்கின்றன. இதற்காகவென ஒவ்வொரு சிறய மக்கள்வாழ்விடத்திலும் நாரத்திலும் தகவல் தருபவர்களுக்கான வலையமைப்பு உருவாக்கப்படுகின்றது.

தேடுதல்களையும் முற்றுகைகளையும் மேற்கொள்ளல். இந்த நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியவர்களை சோதனையிடுகின்ற நோக்கிலும் கெரில்லாக்களை பிடிக்கும் நோக்கிலும், அத்துடன் கெரில்லாக்களால் பயன்படுத்தபடக்கூடிய ஆயுதங்கள் , வெடிப்பொருட்கள்,மருந்துப்பொருட்கள், இதர பெறுமதிமிக்க பொருட்கள் போன்றவற்றை கையகப்படுத்தும் நோக்கிலும் மேற்கொள்ளப்படுகின்றன. சோதனை நடத்தப்பட்ட கட்டடங்களிலுள்ள வீடுகள், நிறுவனங்கள், ஆலைகள் போன்றவற்றில் அடையாளக்குறி இடப்படுகின்றது. திடீர்ச் சோதனைகளை ஒழுங்குப்படுத்தல் பிரதேச மக்களை சோதனையிடுகின்ற நோக்கிலும் பிற வகைச் சோதனையின் வினைத்திறனைப் பரிசோதிப்பதற்காகவும் பிரதானமாக பயமுறுத்தும் நோக்கிலும் வீதிகளில் திடீர்சோதனைகளை மேற் கொள்வதற்குப் பரிந்துறைக்கப்படுகின்றது.

தொடர்வான்....

# பயங்கரவாத தடைச்சட்டம் நீக்குவது தொடர்பில் தமிழ் தரப்பு ஒன்றிணைய வேண்டும்

முன்னாள் வட மாகாண சபை கல்வி அமைச்சர் கலாநிதி கே.சர்வேஸ்வரன்

பயங்கரவாதத் தடைச்சட்டம் ஐ.நா மனித உரிமைப் பேரவை மட்டும் போய்விட்டது. அதனது பல தீர்மானங்களுக்குள்ளும் அது வந்துவிட்டது. அதாவது பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கவேண்டும் என்பதும் வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கு சர்வதேச தரத்திலான சட்டங்களை உருவாக்கிக்கொள்ளலாம். அவ்வாறு தான் தீர்மானங்களில் கூறப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தினை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் கொண்டுவருகின்றபோது தற்காலிக ஏற்பாடாகத்தான் கூறினார். ஆனால் தற்காலிக ஏற்பாடு இன்று அது சுமார் முப்பது, நாற்பது வருடங்களுக்கு மேல் நீடித்துள்ளது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினுடைய அவசியம் இல்லை. ஏனென்றால் ஏனைய வன்முறைச் சம்பவங்கள் குற்றவியல் சட்டத்தினூடாக விசாரிக்கப்படலாம்.

கொழும்பில் நடைபெற்ற போராட்டம் என்பது சர்வதேச சமூகமே அந்தப் போராட்டத்தினை ஏற்றுக்கொண்டு. அந்தப் போராட்டங்களுக்கு அரசாங்கம் இடையூறு செய்யக்கூடாது. அது மக்களது அடிப்படை உரிமை என்றும், தங்களது அரசிற்கு அல்லது ஆட்சிக்கு எதிரான குறைகளை குற்றங்களை சுட்டிக்காட்டிப் போராடுவது சரியானது. கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது வீடுகள் எரியூட்டப்பட்டமை, வாகனங்கள் எரிக்கப்பட்டதை வைத்து இவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமாக மக்களைக் கைதுசெய்திருக்கலாம். ஆனால் அதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றித் தலைவர்மற்றும் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு நேரடியான சம்பந்தம் இல்லை. அவர்கள் இந்தப் போராட்டத்தை வழிநடத்திச் சென்றவர்கள். குறித்த சம்பவங்கள் நடக்கின்ற போது பொலிசாரும் இராணுவத்தினரும் கடமையில் இருந்தனர். உண்மையில் கைது செய்யப்படவேண்டியவர்கள் குற்றம் இழைக்கப்பட்ட போது அதனைப் பார்த்துக்கொண்டிருந்த பொலிசார் மற்றும் இராணுவத்தினரை. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களே பார்த்துக்கொண்டிருப்பது மிகப்பெரிய குற்றம்.

வீதிகளில், கிராமங்களில் தடைகளை ஏற்படுத்தும் நீங்கள், ஏன் அன்றைய தினம் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்கிற கேள்வி எழுகின்றது. தேவையெனில் வானத்திற்கு சூடு நடத்தி நபர்களைக் கலைத்திருக்கலாம். ஆனால் இவர்களில் கணிசமானவர்கள் இதற்கு ஆதரவாத்தான் இருந்திருக்கிறார்கள். இவர்கள் பார்வையாளர்களாகத் தான் நின்றார்களே தவிர கடமையைச் செய்யவில்லை. பின்னர் சமூக வலைதளங்களில் வெளியான வீடியோக்கள், புகைப்படங்களை வைத்தே கைது செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒரு நாட்டிற்கு பயங்கரவாதமாக இருப்பது இன்னொரு நாட்டிற்கு விடுதலைப்போராட்டமாகவும் இருக்கிறது. ஐ.நா உட்பட்ட பல்வேறு நாடுகள் கொழும்பில் நடைபெற்ற போராட்டத்தை அரசாங்கம் ஒடுக்கக்கூடாது, வன்முறைகளைப் பாவிக்கக்கூடாது என அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்தார்கள்.

தற்போது எங்களைப் பொறுத்தவரையில், இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கானத் தேவை இலங்கையில் இல்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் அரசியல் பழிவாங்கல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது என்பதும் ஐ.நா சபை வரைக்கும்தெரிந்திருக்கிறதுஎன்பது இன்றைய யதார்த்தம். ஏற்கனவே இந்த விடயம் சர்வதேச அரங்கில் பேசப்படத் தொடங்கிவிட்டது. ஆகவே சர்வதேச அழுத்தங்களை அதிகரிப்பதற்கான உபாயங்களை நாங்கள் வகுக்கவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கினால் எமது பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதும் இல்லை. யுத்தம் முடிவடைந்த பின்னரும் தமிழ் மக்கள் மத்தியில் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் மிக மோசமான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்களும் இருக்கிறது. விடுதலைப்புலிகளின் நினைவேந்தல் நிகழ்வுகளை, மாவீரர்களின் நினைவுநாளினை அவர்களது உறவுகள் அனுஸ்டிக்கின்ற போதும், உயிர்நீத்த அப்பாவிப் பொதுமக்களை நினைவுகூருகின்ற வேளைகளில் என்றெல்லாம் இந்தப் பயங்கரவாதத் தட்டம் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு பிரயோகிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தமிழ்த் தலைவர்களாகிய நாங்கள் செய்யவேண்டியது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிக்க சர்வதேச சமூகம் இன்று முன்வந்திருக்கும் வேளையில் அதை நாமும் பலப்படுத்தி உபாயங்களைக் கையாளவேண்டும். மனித உரிமைப் பேரவையில் இந்த விடயத்தினை நாம் காத்திரமாகப் பயன்படுத்த வேண்டும். இலங்கையில் சிங்கள அரசியல் சமூகம் இதனைச் செய்யாது. இன்று மனித உரிமைப் பேரவைக்கும் சென்று அவர்கள் காட்டமாக கதைத்து விட்டே வந்திருக்கிறார்கள். ஆகையால் நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுப்பது கவனயீர்ப்பாக இருக்கும்.

ஆனால் ஏற்கனவே அந்தக் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கிறது. ஈர்க்கப்பட்ட நிலையில் நாங்கள் அடுத்தகட்டத்தை நோக்கியே நகர்த்தவேண்டும். கவனம் ஈர்க்கப்பட்ட பின்னரும் நாங்கள் சிறு விடயங்களைச் செய்துகொண்டிருக்காமல் பயங்கரவாதத் தடைச்சட்டம் எந்த அளவிற்கு துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதும் அதில் செய்யக்கூடிய மாற்றம் எந்தளவிற்கு பொய்யானதும் போலியானதும் இன்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பதும் இன்று இச்சட்டத்திற்கானதொரு தேவையும் இல்லை.

இன்று துப்பாக்கிச்சூடு நடத்தப்படுகிறது. இராணுவம் மற்றும் மாபியாக்கள் துப்பாக்கிகளை உபயோகிக்கிறார்கள். இலங்கையில் மாபியாக்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக பாதுகாப்புத் தரப்பினரே செயற்படுகின்றமை என்கிற நிலைதான் இருக்கிறது. இதனை நாங்கள் நிரூபிக்கவேண்டும். அண்மைய துப்பாக்கிச்சூடு சம்பவமும், கிளிநொச்சியில் இருக்கும் இராணுவம் ஒருவரிடமிருந்து துப்பாக்கி பெறப்பட்டிருக்கிறது. இவை சாதாரண குற்றவியல் சட்டங்களினூடாக கையாளப்படவேண்டியவை. போதியளவு சட்டங்கள் இங்கு இருக்கிறது. இதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையில்லை. இவ்வாறான சம்பவங்களுக்கு இராணுவச் சட்டமும் இருக்கிறது. குற்றவியல் சட்டமும் இருக்கிறது. மக்களுக்கான குற்றவியல் சட்டமும் இருக்கிறது.

ஆகவே இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது இன்று இலங்கைக்கு தேவையற்றதொன்று. இலங்கையில் இராணுவமும் தேவையில்லை ஏனென்றால் அண்டைய நாடுகளுடன் படையெடுப்போ அல்லது எந்தவித முறுகலும் கிடையாது. இலங்கை ஒரு சிறிய தீவு. இலங்கையின் இராணுவ மயமாக்கல் என்பது தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கான திட்டம். இந்த இராணுவ மயமாக்கலுக்கு கேள்விக்கிடமற்ற அதிகாரங்களை வழங்குவதற்காக இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்னர் ஏன் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவைப்படுகிறது என்றால் இராணுவத்தினருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து வடகிழக்கினை சிங்கள பௌத்த மயமாக்குவதற்கு நாங்கள் சென்று எதனையும் செய்ய இயலாது. அவர்களுக்கெதிரான நாங்கள் வழக்குத் தொடுக்க முடியாது. எதனையும் செய்ய




முடியாத அளவிற்கு இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களுக்கு அதிகாரங்களை வழங்குகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமாக சுடுபட்டு இறந்தால் அதற்கான தண்டனைகளை வழங்கும் அதிகாரம் இல்லை. ஆகவே அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற ஒரு சட்டமே இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம். ஆகவே இது முழுமையாக நீக்கப்படவேண்டும். இன்றைய இலங்கையின் நிலைமையில் இச்சட்டம் தேவையில்லை மற்றையது இன்று இலங்கையில் பயங்கரவாதம் கிடையாது என்பதும் உண்மை.

இந்திய - இலங்கை 1.4 என்ன கூறுகிறதெனில் வடக்கு கிழக்கு தமிழர்களின் வரலாற்று பூர்வ வாழ்விடம். அதனை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டிருக்கின்றன. ஆனால் இன்று அதனை மறுக்கக்கூடிய வகையில் அரச தரப்பினர் கடந்த 13 வருடங்களாக வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கலை செய்து வருகின்றீர்கள். அதற்குக் காரணமாக இருப்பது இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம். ஏனென்றால் அதற்கெதிராக நாங்கள் போராட்டம் செய்யவோ, அதற்கெதிரான விடயங்களைச் செய்யவோ முடியாது. இராணுவத்தினருக்கு அதிகூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அறிமுகப்படுத்தும் பிரதான கருவிகள் இராணுவமும் பொலிசாரும். இராணுவமும் பொலிசாரும் தமிழ் மக்களுக்கெதிராக மிகப்பெரிய அளவில் பயன்படுத்துகிறார்கள் அத்துடன் வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த மாக்கலைச் செய்வதற்கும் இந்தத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை ஒடுக்குவதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

ஈஸ்டர் தாக்குதல் நடந்து சுமார் ஐந்து வருடங்களைக் கடந்துவிட்டது. இரண்டு அரசாங்கங்கள் மாறிவிட்டது. ஆனால் இன்னமும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி - சுதந்திரக்கட்சி இணைந்த அரசாங்கம், மொட்டுக்கட்சி அரசாங்கம் இருந்தது. பின்னர் மொட்டுக்கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த அரசாங்கம் என தற்போது மூன்று அரசாங்கங்கள் மாறிவிட்டன.

ஆகமொத்தம் ஆட்சிசெய்யக் கூடியவர்கள். ஈஸ்டர் தாக்குதலின் பின்னணி என்ன?, இந்தப் பயங்கரவாதம் எங்கிருந்து வந்தது? இவர்கள் அனைவருக்கும் இதற்குள் தொடர்பிருப்பதால் தான் யார் ஆட்சிக்கு வருகின்ற போதும் இதன் உண்மைத்தன்மையை வெளியில் தெரியப்படுத்தாமல் இழுத்தடிப்புச் செய்கிறார்கள். அரச தலையீடு இருக்கிறது. இல்லாதுவிடின் மிக விரைவில் விசாரணை செய்து இவ் வழக்கினை முடித்திருக்கலாம். இத்தனை வருடங்களை இழுத்தடிக்கத் தேவையில்லை. இந்த ஆட்சி வந்தவுடன் விசாரணை செய்தவரை கைதுசெய்யலாம் என்கிற நிலையில் அவர் வெளிநாட்டுக்கு சென்றுவிட்டார். முன்னைய அதாவது நல்லாட்சி அரசாங்கம் செய்து முடிக்கவில்லை ஏனெனில் அவர்களது கையிலும் கறை இருந்தது. அவர்கள் செய்யவில்லை என ஆட்சிக்கு வந்தவர் தானும் அதனைச் செய்யவில்லை.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் வத்திக்கான் செல்கின்றார். மனித உரிமைகள் பேரவைக்கு செல்கின்றார் இவை அனைத்தையும் விசாரனை செய்யவேண்டும் எனக் கோருவதற்காகத்தான். ஆகவே ஈஸ்டர் தாக்குதலுக்கும் சர்வதேச விசாரணை கோருகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. சுதந்திரக்கட்சி, மொட்டுக்கட்சி, யானைக்கட்சி மாறி மாறி இலங்கையில் ஆட்சியில் இருக்கிறது. இம்மூன்றுக் கட்சி ஆட்சியிலும் இந்த உண்மைகள் கண்டுபிடிக்கப்படவில்லை ஏனென்றால் அவர்களை வளர்த்துவிட்டது, சம்பளம் கொடுத்தது என பல விடயங்களில் இவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது. புலிகளை உளவு பார்க்கவிடப்பட்டு, பின்னர் இராணுவத்தின் ஒரு உளவுப்பிரிவாக இவர்கள் செயற்பட்டு, கொழும்பில் இவர்களுக்கென அலுவலகம் திறக்கப்பட்டு, சம்பளம் வழங்கப்பட்டு இவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் சுதந்திரமாக நடமாட விடப்பட்டுள்ளார்கள்.

மேல் மட்டத்தில் இருக்கும் ஜனாதிபதி தொடக்கம் நாட்டின் உயர் அதிகாரிகள் என அனைவரும் இதற்குள் அடங்குகிறார்கள். பலர் சுதந்திரமாக விடப்பட்டிருந்தமையால் முக்கிய அதிகாரிகளால் இவர்கள் கண்டுகொள்ளப்படவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது. காத்தான்குடியில் பயிற்சி முகாம் இருக்கிறது. இன்னும் பல செய்திகள் வெளிவந்தன. அந்த நேரங்களில் இவர்களை குறித்த இராணுவம், பொலிசார், உளவுப் பிரிவுகள், அரசியல்வாதிகள், நாட்டின் உயர் அதிகாரிகள் என ஒருவரும் கண்டுகொள்ளாதது ஏன்?. ஏற்கனவே இந்தியத் தரப்பு எச்சரிக்கைகளை இலங்கைக்கு வழங்கியதாகவும் குறித்த எச்சரிக்கை இலங்கையால் கண்டுகொள்ளப்படவில்லை எனவும் செய்திகள் வெளிவந்தன. இதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையில்லை. காலங்காலமாக பொலிசார் தமது கடமைகளைச் செய்தால் இதற்கு தேவை வராது.

இவர்கள் இந்த ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னணியில் இருப்பதால் தான் இவர்கள் அனைவருடனும் கதைத்துப்பார்த்து இயலாமல், கர்தினால் வத்திக்கானுக்கும் ஐ.நாவுக்கும் சென்றுள்ளார். இலங்கையில் சுமார் 84 அல்லது 85 பேருக்கு ஒரு இராணுவம் இருக்கிறது. இந்தியாவில் அது ஆயிரம் பேருக்கு ஒரு இராணுவம். இந்தியாவுக்கு மிகப்பெரிய எல்லை இருக்கிறது. சீன - பாகிஸ்தான் எல்லைகள் இருக்கிறது. நேபாள எல்லை இருக்கிறது.

தொடரும்...

# வட-கிழக்கில் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள போதைப்பொருள் விவகாரம்



போதைப் பொருளுடன் தொடர்புடையவர்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் அல்லது அவர்கள் யார் என்பதை இலங்கையரசு கண்டறிந்து சட்டங்களின் மூலமாக கடுமையான தண்டனைகளைக் கொடுக்கின்ற போதுதான் உண்மையில் இந்த நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழிக்கமுடியும். இதன் பின்னணியில் பொலிசார் மற்றும் இராணுவம், பல வட்டிக்கடைகளை நடத்துவோர், அரசியல்வாதிகள் பணம் கொடுத்து போதைப்பொருட்களை நாட்டில் உலவ விட்டுள்ளார்கள். இவர்களின் உதவியுடன் தான் போதைப்பொருள் வர்த்தகம் இன்று நடைபெறுகிறது. தற்போது நூற்றுக்கணக்கான போதைப்பொருள் வியாபாரிகள் கொழும்மை அண்டிய பிரதேசங்களில் இருக்கிறார்கள். இவர்களில் பலர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள். இலங்கையின் பல பகுதிகளில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் அவர்களுக்கு வேலை செய்பவர்களும் இருக்கிறார்கள். மாறி மாறி வரும் அரசுகள் தங்களுக்கேற்றாற் போல இவர்களைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

இன்று போதை மாத்திரைகளைக் கூட சந்தைகளில் விற்பனை செய்து வருவதாக அண்மைய செய்திகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. யுத்தம் முடிவடைந்த 12 வருடங்களின் பின்னர் வடக்கு கிழக்கில் போதைப்பொருட்களின் பாவனை மிக அதிகரித்துள்ளது. இன்று பாடசாலை மாணவர்கள் கூட போதைப்பொருட்களை பயன்படுத்தி வருவதாக செய்திகள் வெளிவருகின்றன.

இலங்கையைப் பொறுத்தளவில் சட்டங்கள் இன்னமும் கடுமையாக்கப்படவில்லை. தண்டனைகள் வழங்கப்பட்டாலும், குற்றப்பணம், பொது மன்னிப்பு என இலகுவில் குற்றவாளிகள் தப்பித்து வெளியில் வந்து நடமாடுவதைக் காண்கிறோம். பண வசதி படைத்தவர்கள் சட்டத்தின் முன் தப்பித்துவிடுகின்றனர். சாதாரண மனிதன் குற்றம் செய்யாமலும் தண்டனை அனுபவித்த வரலாறுகள் இருக்கிறது. அரேபிய நாடுகளில் போதைப்பொருட்களுக்கான தடையும் சட்டங்களும் குற்றம் செய்தவர்களுக்கான தண்டனைகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. தலையைத் துண்டித்தல், சுட்டுக் கொல்லுதல் போன்ற தண்டனைகள் கூட விதிக்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் பல போதைப்பொருள் வர்த்தகர்கள் தமது பண பலத்தைப் பயன்படுத்தி, மாறி மாறி இலங்கையை ஆட்சிசெய்த அரசுகளின் பிரதிநிதிகளை, உயர் அதிகாரிகளை தம்வசப்படுத்தி நடமாடித் திரிகின்ற நிலைமை தொடர்கின்றது.

கடந்தவாரம் மிகவும் பரபரப்பான செய்தியாக சமூகவலைத்தலங்களில் வவுனியாவை சேர்ந்த மருத்துவர் மதுரங்கன் நியூ லங்கா பார்மசி நடத்திவருகிறார். இவர் மீதே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் இவர் தேவைக்கு மேலதிகமாக வவுனியா மாவட்டத்தில் குறித்த மருந்தை சந்தைப்படுத்தினார் என்கின்ற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்ட நிலையில் குறித்த மாத்திரை இலங்கையில் விற்பனை செய்ய தடையில்லை என்றும் இதில் வீரியம் கூடிய மாத்திரைகளை கொள்வனவு செய்து விற்றதாகவும் கூறப்படுகின்ற போதும் தான் குற்றவாளி என்பதை ஒத்துக்கொள்ளவில்லை இது தொடர்பில் விசாரனைகள் தீவீரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனோடு விசேட அதிரடிப்படையினரும் களம் இறக்கப்பட்டுள்ளனர் போதைக்காக இவை பயன்படுத்தும் நோக்கில் குறித்த மருத்துவர் செயற்பட்டிருந்தால் அது தண்டனைக்கு உரிய குற்றமாகும் என சட்ட வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் இலங்கையை பொறுத்தமட்டில் தற்போது வடக்கு கிழக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துவரும் நிலையில் இவ்வாறு போதைக்கு நிகரான மாத்திரைகளை மருத்துவர்கள் விற்பனை செய்வார்களாக இருந்தால் குறித்த மருத்துவர்களை நம்பி எப்படி மக்கள் செல்வது குறித்த மாத்திரை இளம் சமுதாயத்தினரை இலக்கு வைத்து விற்பனை செய்யப்பட்டதாகவே அறிய முடிகிறது.

வவுனியாவில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்ததாக கூறப்படும் தனியார் வைத்தியசாலை மற்றும் வைத்தியர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்தார். வவுனியாவிலும் போதை மாத்திரைகள் தனியார் வைத்தியசாலை ஒன்றின் பெயரில் அரச வைத்தியர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் அன்று (25.10) ஊடகவியலாளர் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது வவுனியாவில் உள்ள அரச வைத்தியர் ஒருவர் தனது தனியார் வைத்தியசாலையின் பெயரில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் எமக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. குறித்த தகவல் வெளியாகியதை அடுத்து விடுமுறை நாட்களாக இருந்தமையால், தற்போது உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் இணைந்து இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் வைத்தியசாலை, வைத்தியர் மற்றும் அவரிடம் இருந்து குறித்த போதை மாத்திரைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த போதை மாத்திரை கொள்வனவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமையால் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் இரண்டு மாவட்டங்களையும் உள்ளக்கி விசாரணை செய்ய விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது. விசாரணைகள் நிறைவடைந்த பின் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த மே மற்றும் ஜுன் மாதங்களில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மொத்தம் 2,887 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இது ஒரு மாதத்துக்குள்ளான 30 சதவீத அதிகரிப்பாகும். கடந்த மே மாதத்தில் 1,257 பேர் கைது செய்யப்பட்டதுடன், ஜுன் மாதம் 1,630 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் பயன்படுத்தப்படும் முக்கிய போதைப்பொருளாக கஞ்சா மற்றும் ஹெரொயின் ஆகியவை இருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து ஹாஷிஷ், புகையிலை, மதன மோதகம், பாபுல், மாத்திரைகள், மெத்தபேட்டமைன் (ஐஸ்), கொக்கயின் மற்றும் லைசெர்ஜிக் அமிலம் டைதிலாமைடு என்பன பயன்படுத்தப்படுவதாக தெரியவந்துள்ளது. மே மாதத்துடன் ஒப்பிடும்போது, கஞ்சா தொடர்பான குற்றங்கள் ஜுன் மாதத்தில் 49.48 சதவீதத்திலிருந்து 45.89 ஆக குறைந்துள்ளது. மாவட்ட ரீதியாக பார்க்கும் போது, கடந்த ஜுன் மாதத்தில், கொழும்பில் 435 நபர்கள் கைதாகியுள்ளதுடன், தொடர்ந்து கம்பஹா, புத்தளம், கண்டி மற்றும் அனுராதபுரத்தில் இது போன்ற கைதுகள் அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன.

மேலும் 16 மாவட்டங்களில் போதைப்பொருள் குற்றங்களுக்காக கைதானவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. ஜுன் மாதத்தில் கிளிநொச்சி தவிர ஒவ்வொரு மாவட்டமும் கணிசமான எண்ணிக்கையிலான கைதுகளைக் வெளிப்படுத்தியுள்ளது. பாலின அடிப்படையில், ஜுன் மாதத்தில், 97 சதவீதம் ஆண்களே போதைப்பொருள் குற்றங்களுக்காக கைதாகியுள்ளனர். கைதானவர்களில் 62 சதவீதம் பேர் 20-34 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள். மேலும் கைதானவர்களில் 52.76 சதவீதம் பேர் திருமணமாகாதவர்களாவர். 46.93 சதவீதம் பேர் திருமணமானவர்கள், மீதமுள்ளவர்கள் விவாகரத்து பெற்றவர்கள் மற்றும் இணைந்து வாழ்பவர்களாவர். கல்வி நிலையைப் பொறுத்தவரை, ஜுன் மாதத்தில கைது செய்யப்பட்டவர்களில், 39.3 சதவீதமானவர்கள் க.பொ.த. (சா-த) தகுதி பெற்றுள்ளவர்கள். 5.9 சதவீதமானவர்கள் க.பொ.த. உயர்தரம் படித்தவர்கள். 2.76 சதவீதம் பேர் ஒருபோதும் பள்ளிக்கு சென்றதில்லை. அதேநேரம் கைது செய்யப்பட்டவர்களில் ஐந்து பேர் பட்டதாரிகள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இன அடிப்படையில், ஜுன் மாதத்தில், 74.2 சதவீதம் சிங்களவர்களும், 11.3 பேர் தமிழர்களும், 9.5 சதவீதமான முஸ்லிம்களும் போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். சிறிய அளவில் மலாய்க்காரர்களும் மற்றவர்களும் உள்ளனர். மதப் பிரிவின் அடிப்படையில், ஜுன் மாதத்தில் போதைப்பொருள் குற்றங்களுக்காக கைதானவர்களில் 75.09 சதவீதம் பேர் பௌத்தவர்கள். 12.02 சதவீதம் பேர் இஸ்லாமியர்களாகவும், 9.33 சதவீதம் இந்துக்களாகவும் இருப்பதுடன், 3.5 சதவீதம் பேர் கிறிஸ்தவர்களாவர்.

தொழில் வாரியாக, ஜுன் மாதத்தில், 33.9 சதவீதம் பேர் சாதாரண தொழிலாளர்களே போதைப்பொருள் குற்றங்களுக்காக கைதாகியுள்ளனர். தொழிலற்றோர் 17.1 சதவீதமானவர்களும், விவசாயிகள் 7.9 சதவீதமானோரும், தொழில் வல்லுநர்கள் 3.7 சதவீதமானோரும், சுயதொழில் செய்பவர்கள் 3.5 சதவீதமானோரும் கைதாகியுள்ளனர். அவர்களுடன் 0.4 சதவீதமான மாணவர்களும் போதைப்பொருள் குற்றங்களுக்காக கைதாகி இருக்கின்றனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் சாரதிகளாகவும், மீனவர்கள் மற்றும் வர்த்தகர்களும் அடங்குகின்றனர். தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி பிரிவின் போதைப்பொருள் தகவல் அறிக்கையின் இருந்து இந்த புள்ளிவிபரங்கள் கிடைக்கப்பெற்றன.

எனவே நாட்டினுடைய எதிர்காலம் கருதி ஆட்சியிலிருக்கும் அரசு போதைப்பொருள் பாவனையை முற்றாகத் தடைசெய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டங்கள், தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும். பிணை வழங்குதல் முற்றாக நிறுத்தப்படவேண்டும். முப்படைகள் இன்னமும் வினைத்திறனாக செயற்படவேண்டும். இலங்கையின் கடற்பரப்புக்களின் ஊடாகவே பெருமளவிலான போதைப்பொருள் வர்த்தகம் இடம்பெறுவதாக அறிய முடிகிறது. இளைஞர்கள், பாடசாலை சமூகத்தினர் பெருமளவில் பாதிக்கப்படுகின்றபோது எதிர்காலத்தில் இலங்கையின் நிலை மோசமாகிவிடும்.

ஆகவே விரைவில் இதற்கென விசேட குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்பட்டு, கண்காணிப்புக்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இந் நடவடிக்கை சமூக பொறுப்புணர்ந்து தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். அப்போதுதான் போதைப்பொருட்களின் பாவனையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இயலும். எமது எதிர்கால சந்ததியினரைக் காப்பாற்ற முடியும்.

**சுழியோடி**

# பேரினவாத அரசாங்கம் அன்றிலிருந்து இன்றுவரை

**முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி கௌரவ சி.சிவமோகன்**



கேள்வி : இன்றைய காலக்கட்டத்திலே அரச பயங்கரவாதம் என்பதும் அவர்களுடைய தொடர் ஆக்கிரமிப்பு என்பதும் தமிழ் மக்கள் மத்தியில் பொருளாதார சீர்குலைவு மற்றும் தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டம் என்பவற்றில் பாரிய ஒரு பின்னடைவை எற்ப்படுத்திக்கொண்டிருகின்றது. இந்த நிலையிலே நீங்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையிலும் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டிலே நீங்கள் இருக்கின்றீர்கள். அந்த அடிப்படையிலே உங்களுடைய நிலைப்பாடு என்ன?

பதில் : இன்று நாங்கள் வெளிப்படையாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. இந்த தமிழர்கள் மீதான சிங்கள அரசர்களின் அடக்குமுறைகள் அரசபயங்கரவாதம் என்ற விதத்தில் பார்க்ககூடிய நிலையில் தான் இருக்கின்றது. நீங்கள் பார்க்கலாம் 13வது திருத்தத்தை கொண்டு வந்து தமிழ் மக்களை ஏமாற்றி விட்டு இன்று தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக ஆலயங்கள் பூர்வீக நிலங்களை பரிமுதல் செய்து அவற்றின் மீது தங்களின் அடக்குமுறைகளை தொல்பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் நடத்திகொண்டிருக்கின்றார்கள். அதே போல தான் மகாவலி அபிவிருத்தி சபை என்பதன் ஊடாக தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் பாரிய முயற்சிகள் முல்லைத்தீவு பிரதேசத்திலும் கூட தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை அணைத்தும் அது மட்டுமல்ல இராணுவ ரீதியான அடக்குமுறைகள் இராணுவம் தமிழர்களின் நிலங்களை ஆயுதங்களை வைத்துக்கொண்டு கையகப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

இப்படியாக பல்வேறு திணைக்களங்களின் ஊடாக வர்தமானிகளை வெளியிட்டு பாராளுமன்றம் அதற்கு துணைபோகின்றது. அதன் பெயர் என்னவென்றால் அரச பயங்கரவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிரான சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளை பாராளுமன்றம் என்ற போர்வையில் வைத்துக்கொண்டு தன்னிச்சையாக வர்தமானிகளை வெளியிட்டு காணிகளை அபகரித்து செயற்ப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் இவையணைத்தும் தமிழர்களுடனான அரசியல் தீர்வுக்கு வரவேண்டும் என்ற அடிப்படையில் தமிழர்களின் ஆயத போராட்டத்தை நடைப்பெற்றகாலத்தில் ஏற்றுக்கொண்ட இந்த அரசுகள் வெளிநாடுகளின் மத்தியஸ்த்தத்தின் ஊடாக ஏற்றுக்கொண்ட இந்த அரசுகள் இன்று ஆயத போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் தன்னிச்சையாக தங்களுடைய நடவடிக்கையை மேற்க்கொண்டு வருகின்றார்கள். இதனை கேட்பதற்கு எவரும் இல்லாத ஒரு நிலைமை தான் இருக்கின்றது. மீண்டும் மீண்டும் ஐ.நா சபையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு வந்தாலும் சரியான முறையில் அதற்கான அழுத்தங்கள் இலங்கை அரசு மீது இல்லை. அவர்கள் அதிலிருந்து நழுவிக்கொண்டு தான் இருக்கின்றார்கள். எந்த அரசு வந்தாலும் மாறி மாறி வந்தாலும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்ற ஒரு பொய் வாக்குறுதிகளை மட்டும் வழங்கிவிட்டு பின்கதவால் பாரிய ஆக்கிரமிப்பை செய்துக்கொண்டிருக்கின்றார்கள்.

திருகோணமலையில் இன்று நீங்கள் பார்க்கலாம் திருகோணஸ்வரம் என்பது சைவ தொண்மைவாய்ந்த ஆலயம் இந்த ஆலயத்தை தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அங்கு சைவ மக்கள் சென்று அந்த ஆலயத்தில் தாங்கள் நினைத்தமாதிரியான வழிப்பாட்டு உரிமைகளை தட்டிப்பரித்து செயற்ப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அங்குள்ள வீதிகள்தோரும் கடைகள் அமைக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக சிங்கள மக்களுக்கு அந்த கடைகள் வழங்கப்பட்டு சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கை ஒன்றை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் உதவியுடன் செய்துக்கொண்டிருக்கின்றார்கள். அதே போல் இங்கு பார்த்தால் வெடுக்குநாரி மலை நெடுங்கேணியில் அதன் மிதான அடக்குமுறைக்கும் அதே தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் தான் காரணமாக அமைந்திருக்கின்றது. அதே போல் முல்லைத்தீவில் குமளமுனைக்கு மேலே உள்ள கோயில்களில் கூட அவர்களின் வயல் நிலங்களை கூட ஆக்கிரமித்து இந்த தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் செயற்ப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இப்படியாக தொடராக சொல்லலாம் பல்வேறு விடயங்களில் இந்த தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் தலையிட்டுக்கொண்டிருக்கின்றது. இவர்கள் மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் வெலிஓயா என்ற பிரதேசத்தையும் உருவாக்கி சிங்கள குடியேற்றங்களை நிறுவியவர்கள் இன்று நெடுங்கேணியை நோக்கி அதை விஸ்தரித்துக்கொண்டு வருகின்றார்கள். அதே போல் தற்சமயம் மகாவலி அபிவிருத்தி சபை என்ற வர்த்தனமானியை வைத்துக்கொண்டு அவர்கள் கோடிட்ட காணிகளை தற்பொழுது எமது மக்கள் வாழும் இடங்கள் அவர்கள் தொழில் செய்யும் இடங்கள் அவற்றை கூட தட்டிபரிக்கும் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். இப்படியான நடவடிக்கைகளுக்கு என்ன பெயர் அது தான் அந்த அரச பயங்கரவாதம் அதாவது அரச அதிகாரத்தை வைத்துக்கொண்டு தமிழ்மக்கள் மீதான அடக்குமுறைகளை ஏதோ சட்டரீதியாக தாங்கள் நடைமுறைப்படுத்துவது போல் தாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லப்படும் போது அங்கு பொலிசார் சொல்லும் கதைகளையும் தொல்பொருள் ஆராய்ச்சிகார்கள் சொல்லும் கதைகளையும் அந்த வர்தமானி அறிவித்தல்களையும் தான் கருத்தில் எடுக்கின்றார்களே தவிர எமது அப்பாவி மக்களின் உரிமைகளுக்கு எவ்விதமான இடமும் இல்லாத நிலையில் இன்றுநாங்கள்ஒருஅநாதாரவாககைவிடப்பட்டு இருக்கின்றோம். இந்த விடயத்தில் எமது மக்களும் பல விடயங்களை பார்த்தால் எமது மக்களும் இருக்கும் சிங்கள கட்சிகளுக்கும் முஸ்லீம் கட்சிகளுக்கும் துணை போய் ஒரு சிறு சிறு பணத்தொகைக்காக துணை போய் தமிழர்களின் ஒற்றுமையை உருக்குலைத்து செயற்ப்பட்டுக் கொண்டிருப்பதை உடனடியாக கைவிட வேண்டும். தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஒன்றாக நின்றால் தானே தவிர தமிழர்களின் மீதான இந்த அடக்குமுறைகளில் இருந்து விடுபடுவதற்கு எந்த சந்தர்ப்பங்களும் இல்லை எனவே இந்த விடயங்களை எமது பொதுமக்களும் மிகவும் கவனம் எடுக்க வேண்டும். எமது விடயங்களை நாங்கள் பார்த்துக்கொள்வதை விடுத்து மாற்றான் கைகளில் அதை கொடுத்து விட்டு மாற்று இயக்கங்கள் மாற்று கட்சிகள் என்னிடம் போய் மண்டியிட்டு நின்று கொண்டு எமது மக்களின் உரிமைகளை விடுதலைப்புலிகள் இருந்த காலக்கட்டத்தில் கட்டிகாத்த தமிழர் உரிமை நடவடிக்கையை உருக்குலைக்கும் விடயங்களில் தான் நாம் ஈடுப்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

கேள்வி : இதிலொரு விடயமாக குறிப்பாக யுத்தம் நிறைவடைந்த பின்னர் தற்போதைய காலக்கட்டத்தில் பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கான அல்லது அதனை தமிழர் மீது அல்லது தமிழ் போராட்டம் குழுக்கள் மீது திணிக்கப்பட்ட இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதனூடாக அல்லது நீக்கி அதற்கு ஒரு சமிக்கை எடுப்பதன் ஊடாக இந்த பயங்கரவாத பகுதிக்குள் இருந்து தமிழினமும் அதனை சார்ந்தவர்களும் விடுபடும் ஒரு நிலை ஏற்படும் அல்லவா?

பதில் : பயங்கரவாத தடைச்சட்டம் என்பது இவர்கள் ஒரு போது நீக்குவது இல்லை. இவர்கள் அதற்கான ஒரு மாற்று தடைச்சட்டத்தை கொண்டுவருவார்கள். அதிலே சில சமயங்களில் பயங்கரவாதம் என்ற வசனம் இல்லாமல் இருக்கலாம். அதுவும் அப்படி இருக்காது என்று தான் நான் நினைக்கின்றேன். ஒரு மாற்று பயங்கரவாத தடைச்சட்டத்தை தான் கொண்டு வருவார்கள். அதிலே பார்த்தால் சூழ்ச்சயமாக சில வசனங்களை எடுத்து விடுவதன் மூலம் ஏதோ தாங்கள் பலது செய்துவிட்டது போல காட்டிக்கொள்ள முனைவார்கள். அதாவது தற்பொழுது உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தில் விசாரனைகள் இன்றி பல வருடங்கள் மீண்டும் மீண்டும் ஆறு ஆறு மாதங்களுக்குஒருக்காஅதைநீடித்துக்கொண்டு செல்லக்கூடிய நிலைமைகள் தற்பொழுது உள்ளது. அதிலே சில மாற்றங்களை கொண்டு வந்து மீண்டும் அதை ஒரு மாதமோ இரண்டு மாதமோ என்று இவர்கள் கொண்டு வருவார்களே தவிர மீண்டும் மீண்டும் நினைத்தால் நீதிமன்றங்களின் ஊடாக இராணுவத்தினரும் பொலிசாரும் தாங்கள் நினைத்தது போல் ஒரு அணுகுமுறைகளை கொண்டு வரத்தான் போவார்கள். தற்பொழுது புதிதாக கொண்டுவந்தால் புதிதான நியமனங்களுக்கு ஏற்ப கொண்டு வருவது போல் காட்டிக்கொண்டாலும் அதிலும் கூட சட்டதரணிகள் தலையீடு செய்யலாம் என்ற ஒரு வியம் வருமே தவிர எம் மீதான எமது மக்கள் மீதான அடக்குமுறைகளை இவர்கள் நீக்க போவது இல்லை. இன்று சிங்கள தேசம் பயங்கரவாத தடைச்சட்டதால் மீண்டும் பாதிக்கப்படும் ஒரு நிலை வந்த போது தான் சிங்கள மக்கள் சற்று இந்த விடயங்களை சிந்திக்கின்றார்கள். அல்லது ஏதோ பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக கொண்டு வரப்பட்டது தமிழர்களை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்குமான கருத்து தான் சிங்கள மக்களிம் காணப்பட்டது. இன்று அதே ஆயுதம் அவர்களின் கழுத்தில் விழுந்த போது கொஞ்சம் விளிப்புணர்வுடன் தமிழர்களிடம் சேர்ந்து குரல் கொடுக்கும் நடவடிக்கைகள் காணப்படுகின்றது. இது தொடரும் என்று எதிர்பார்க்க முடியாது மீண்டும் இதே சட்டம் தமிழர்களின் கழுத்துக்களை நெரிக்கும் போது மீண்டும் சிங்களவர்கள் குதித்து கும்மாளம் அடிக்க தான் போகின்றார்கள்.

கேள்வி : ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தற்பொழுது ஜனாதிபதியாக இருக்கின்றார்கள். அவர் இருந்த காலக்கட்டத்திலே கம்பிரிலிய திட்டத்தை கொண்டு வந்து தமிழ் மக்களுக்கான ஓர் தீர்வினை நோக்கி நகர்ந்த போது ஆட்சி கவிழ்க்கப்பட்ட ஒரு நிலையிலே மீண்டும் தற்பொழுது அப்பொழுது பிரதமாராக இருந்தவர் தற்பொழுது ஜனாதிபதியாக வந்த ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள். அதனூடாக ஒரு சுமூகமான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியமா?

பதில் : கம்பிரிலிய திட்டம் என்பது எமது மக்களிடம் எடுக்கும் வரிப்பணத்தில் எங்களுக்காக தரப்பட்ட நிதிவழங்கள் தான் அது தனியாக தமிழர்களுக்கு மட்டும் தரப்படவில்லை ஒட்டுமொத்தமாக இலங்கைக்கு வழங்கப்பட்ட திட்டம். அது வேறொரு விடயமாக தான் அது பாக்கப்பட வேண்டும். அதே சமயம் இன்று அவர் உரிய அரியாசனத்தில் ஏறியிருக்கின்றார் என்பதற்காக அவர் எல்லாத்யைும் தந்து விடப்போகின்றார் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். சிங்கள மக்கள் என்றும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை ஏற்றுக்கொள்பவர்கள் தான் மீண்டும் மீண்டும் தலைமேலாக கொண்டு வருவார்கள். அதே ஆயுதத்தை பாவித்து தான் கோட்டபாய ராஜபக்ஷ பாரிய வெற்றிப்பெற்று ஆட்சி அமைத்தார். அதாவது தமிழர்கள் மீது தான் மட்டும் தான் அடக்குமுறை செய்யக்கூடியவன் மற்றவர்கள் இல்லை என்று காட்டிக்கொண்டார். இன்று ரணில் விக்கிரமசிங்கவிற்குரிய சந்தர்ப்பங்கள் வரும் பொழுது அவர்கள் முகத்திரை எப்படி மாறும் என்பது இது வரை தெரியாது யாரும் வாக்குறுதி வழங்க முடியாது அவர்களும் தமிழர்கள் சார்பாக தீர்வை கொண்டு வந்து தருவார்கள் என்று அவர் சொல்லவாரே தவிர அந்த வார்த்தைகள் எவ்வளவு தூரத்திற்கு நிறைவேறும் என்பது உத்தரவாதமாக எங்குமே இல்லை.

கேள்வி : தற்பொழுது தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன. பயங்கரவாத தடைசட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் விடுப்பிதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன. என்றெல்லாம் தற்பொழுது பாராளுமன்றத்தில் கூறிவரும் நிலையில் அதனை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

பதில் : நிச்சயமாக என்னால் ஒன்று கூற முடியும் ஒரு சில நியாபூர்வமாக விடுவிக்கப்பட வேண்டிய அரசியல் கைதிகளை இவர்கள் விடுவிக்க கூடும் அது விடுப்பிதால் அது ஒரு நன்மையான விடயமாக இருக்கும் அது வேறு ஒரு பக்கத்தில் பார்க்கலாம் அதே சமயம் ரணில் விக்கிரமசிங்க இந்த பதவியை பெற்றவுடன் எமக்கான தீர்வு தருவார் என்று சொல்லி நம்புவதற்கு எந்த ஆதாரம் உண்டு நான் நினைக்கின்றேன் மூன்று நான்கு தசாப்பதமாக இதோ தருகின்றோம் இதோ தருகின்றோம் அதோ பேசுகின்றோம். இதோ கதைக்கின்றோம். இந்தா கொமிற்றி போடப்படுகின்றது பல கட்சிகளுக்கான அமைப்புக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது என்று எல்லாம் வந்து இறுதியாக 2005ற்கு பின் ஒரு அரசியல் யாப்பு மாற்றம் ஊடாக நாங்கள் கொண்டு வரப்போகின்றோம் என்ற ஒரு நடாகத்தை நாடி கடைசியாக அந்த நாடகமும் போட்டுடைக்கப்பட்டிருக்கின்றது. மீண்டும் ஆடுவது அணைத்தும் அரசியலுக்காக நாடகங்களாக பார்க்கலாமே தவிர எதுவுமே தமிழர்களுக்கான தீர்வுகளாக பார்க்கப்படலாம் என்று சொல்வதற்கு எந்த வித உத்தரவாமும் இல்லை. உதாரணங்களும் இல்லை.

**நேர்காணல் : இரணியன்**

# தேர்தல் ஒன்றிற்காக காய் நகர்த்தும் அரச தரப்பு விவசாயம் பற்றி சிந்திப்பது சிறந்தது

## முன்னாள் விவசாய அமைச்சர் பவான் அவர்களுடனான நேர்காணல்

கேள்வி: மாகாணசபை தேர்தல் தொடர்பாக உங்களுடைய கருத்து எவ்வாறு இருக்கின்றது?

பதில்: மாகாணசபையோ ஏனைய தேர்தல்கள் நடத்துவது என்பது தேர்தலுக்கு யார் தயாராக இருக்கின்றோம் என்றது பார்க்க வேண்டும். சாதாரணமாக எதிர் கட்சியை பொறுத்த மட்டுல தேர்தல் வைக்க வேண்டும் என்ற முனைப்பில் இருக்கின்றார்கள். ஆனால் ஆளும் கட்சியாக இன்னும் பலமாக பாராளுமன்றத்தில் கூடிய ஆசனங்களை வைத்துக்கொண்டிருக்கின்ற மஹிந்த தரப்புக்கு வந்து இந்த தேர்தல் நடத்துவதில் என்ன இலாபம் இருக்கின்றது என்று தான் பார்க்க வேண்டும் அவர்களை பொறுத்த மட்டில உங்களுக்கு தெரியும் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் வந்து அதிகாரங்கள் கூடுதலாக உள்ளூராட்சி சபையில கூடுதலான ஆசனங்களை பெற்று கூடுதலான அதிகாரங்களை பெற்று அவற்றை கையில தான் இன்றைக்கும் இருக்கின்றது. மாகாணசபையை பொறுத்த மட்டில மாகாணசபை தேர்தல் நடத்தப்படாமல் இருந்தாலும் கூட அதனுடைய ஆளுனர்கள் எல்லாரும் வந்து மஹிந்த குரூப்க்கு நியமிக்கப்பட்டவர்கள் தான் ஆளுநர்களாக இருக்கின்றம்.

ஆகவே அந்த மாகாணசபையினுடைய நிர்வாகங்கள் கூட இன்டைக்கு வந்து மஹிந்தவினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற மாதிரி தான் நாங்கள் பார்க்க முடியும். ஏனென்றால் ஆளுநர்கள் அவர்களால் நியமிக்கப்பட்டபடியால் வந்து அவர்களுடைய கையில் தான் இருக்கு பாராளுமன்றம் மஹிந்த குரூப்பினுடைய கையில இருக்கின்றது. மாகாணசபையினுடைய அதிகாரங்கள் அதிகாரிகளுடைய ஆளுமை மஹிந்தவினுடைய கையில இருக்கின்றது. உள்ளூராட்சி சபையினுடைய மிக அதிகமான உறுப்பினர்கள் வந்து மஹிந்த குரூப்பினால் நியமிக்கப்பட்டவர்கள் இப்படி இருக்கின்ற போது ஒரு நாளும் ஒரு தேர்தல் நடக்கின்றதை அவர்கள் விரும்ப மாட்டார்கள்.

இது முதலாவதுவிடயம். எதிர்கட்சிகள் தேர்தலை நடத்து என்று சொல்லிக்கொண்டிருக்கும் இது வழமையான விடயம் அது சாதாரணமான ஒரு சூழ்நிலையிலும் அவர்கள் ஒரு சிறிய பிரச்சனைகளை வைத்தும் தேர்தலை திரும்ப நடத்த வேண்டும் என்ற விடயங்களை தான் அவர்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆளும் தரப்பு என்ன நினைக்கின்றது என்பது தான் இங்கு முக்கியமான விடயம். சரி சர்வதேச அழுத்தங்கள் மூலம் ஏதாவது நடக்குமா என்று பார்த்தால் இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் வந்து சர்வதேசங்களை பொறுத்த வரையில அக்கறை கூடுதலாக வந்து இன்றைக்கு நடக்கின்ற ரஷ்ய - உக்ரைன் போரை நோக்கி தான் சர்வதேச பார்வை கூடுதலாக அதன் மீது தான் கவனம் செலுத்த வேண்டிய நிலமை அதிகம் இருக்கன்றது. அதுமட்டும் அல்ல இன்றைக்கு நீங்கள் கொரோனா வந்ததிற்கு பிறகு எல்லா நாடுகளும் தங்களுடைய பொருளாதார நிலைகளை சீர்செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்திலே எல்லா நாடுகளும் இருக்கின்றது.

ஒவ்வொரு நாடுகளிலும் உள்ளூர் பிரச்சனைகள் பொருளாதார ரீதியான பிரச்சனைகள் உங்களுக்கு தெரியும் லண்டனில் கூட இந்த டச் பிரச்சனைகள் வாழ்க்கை செலவு அதிகரிக்கின்ற பிரச்சனைகள் என்று சொல்லி மிக பெரிய வளர்ச்சியடைந்த நாடுகள் கூட அவர்களுடைய பிரச்சனைகளை பார்க்கின்றதில் தான் மிக கூடுதலாக கவனம் செலுத்துகின்றனர். அது மாத்திரமல்ல இன்றைக்கு இருக்கின்ற நிலமையில் பொருளாதாரத்தில் வந்து மறுசீரமைக்க வேண்டிய சூழ்நிலை உலகளாவிய ரீதியாக இருக்கின்ற சகல அரச எல்லைகளுக்குள்ளே இருக்கின்ற ஒரு விடயம். எனவே இந்த நிலமையில் பார்க்கின்ற பொழுது இலங்கையில் தேர்தல் நடத்த வேண்டும். அதில் நீங்கள் ஒரு நல்ல நிர்வாகத்தை கொண்டு வர வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என்ற நிலமையில உலக நாடுகள் இருக்கோ என்று கேட்டால் அல்லது எங்கள் சார்ந்த நாடுகள் கூட அந்த நிலமையில கூடுதல் கவனம் செலுத்துவார்களா என்பது சந்தேகமாக இருக்கின்ற இந்த சூழ்நிலையில தேர்தல் என்பது உள்ளூரிலும் அதற்கான ஆதரவு குறைவாக இருக்கின்றது. புறசூழல்களும் அதற்கான ஆதரவினை கொடுக்க கூடிய சூழ்நிலை இருப்பதாக தெரியவில்லை. இப்படியான சூழ்நிலையில வந்த எப்படி இவர்கள் தேர்தலை நடத்துவார்கள் என்றால் அவர்களுக்கு காரணம் இருக்கின்றது. பொருளாதாரம் பிரச்சனையாக இருக்கின்றது. பொருளாதாரம் சீரழிந்து போய் இருக்கின்ற நிலைமையில நாங்கள் தேர்தலுக்காக பெரிய அளவு பணத்தை செலவழிக்க முடியாத காரணங்களை சொல்லி சொல்லிய இத இன்னும் இழுத்துக்கொண்டு போகின்ற சூழல் தான் நான் நினைக்கல இப்போதைக்கு ஒரு மிக அண்மைகாலங்களில் தேர்தல் நடக்குமோ என்பது சந்தேகமாக தான் உள்ளது.

கேள்வி: பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு அப்பால் மாகாணசபை தேர்தலை நடத்துவனூடாக அந்த அதிகாரங்களை கையளிப்பதன் ஊடாக அதனூடாக ஒரு அபிவிருத்தி திட்டத்தை முற் கொண்டு செல்வதற்குரிய சாத்திய கூறுகள் இருக்கும் தானே அதனை கொண்டு சென்றால் என்ன என்று கேட்கின்றேன்.

பதில் : நீங்கள் சொல்கிறது சரியான விடயத்தை பற்றி தான் பேசுகின்றீர்கள் இது வேற விசியம் ஆனால் சூழ்நிலை என்ன என்கின்றதை தான் நாங்கள் பார்க்க வேண்டி இருக்கின்றது. இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் வந்து மாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் பெருபான்மை கட்டாயம் தேவை ஒரு சிம்பிள் பெருபான்மை இருந்தால் தான் அதை நடத்துவதற்கான சட்டரீதியான விடயங்கள் இங்கு இருக்கின்றது. ஆகவே அதற்கு பெருபான்மையாக இருக்கின்ற மஹிந்த ஆதரவு அழிக்குமா என்ற கேள்வி குறிதானே இப்ப அவர்கள் அதை கொண்டு வந்து சட்ட ரீதியாக மாகாணசபையை நடத்துவதற்கான எல்லை நிர்வாகங்கள் என்ற பல விடயங்கள் இருக்கின்றது. இதை அவர்கள் செய்வார்களா? செய்ய கூடிய சூழ்நிலை இருக்கின்றதா? என்பது தானே கேள்வி நீங்கள் சொல்லுகின்ற விடயம் அப்படி ஒன்று நடந்தால் இந்த நிர்வாகங்களை கொண்டு எங்களுடைய பிரச்சனைகளை சீர்செய்யலாம் என்ற நோக்கில் நீங்கள் சொல்கின்றீர்கள் ஆனால் அந்த சூழ்நிலை நடத்துவதற்குரியதாக இருக்கின்றதா என்பது தானே கேள்வி குறி.

கேள்வி : அவ்வாறு இருந்தால் எப்படி அதற்கான சூழலை உருவாக்கி எடுக்க வேண்டும். அதற்காக இருந்தால் என்ன முன்னெடுப்புக்களை அரசாங்கம் மேற்கொண்டால் அவ்வாறான சூழ்நிலை சாத்தியமாகும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்.

பதில் : அரசு என்று நீங்கள் பார்த்தால் இன்றைக்கு ஜனாதிபாதி வந்து மஹிந்தவினுடைய கையாளாக செயற்ப்பட்டுக்கொண்டிருக்கின்ற அரசு தான் இன்றைக்கு நடக்குது. தேசிய அரசோ எந்த அரசும் இல்லை மஹிந்த அரசினுடைய முகத்தை தான் பார்க்க முடிகின்றது.

கேள்வி : நீங்கள் கூறுவது ரணில் விக்கிரமசிங்ஹ அரசாங்கம் வந்து மஹிந்த ராஜபக்ஷக்களுடைய அல்லது கோட்டாபாய ராஜபக்ஷகளுடைய செல்லப்பிள்ளையாக தான் செயற்படுகிறார் என்று கூறுகின்றீர்களா?

பதில் : அவருக்கு வேற வழியும் இல்லை தானே அவராலே நியமிக்கப்பட்ட ஒரால் என்று



தானே இருக்கின்றார். இன்று வரைக்கும் அவர்களை மீறி எந்தவொரு செயற்பாட்டில் ஈடுப்பட்டதற்கான அறிகுறி அதை விட கடந்த காலங்களில் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களை வேட்டையாடுவது அல்லது அவர்களை தண்டிக்கின்றது போன்ற விடயங்களை தானே அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றார்கயே ஒழிய இந்த நாட்டினுடைய புதிய ஒரு பொருளாதார திட்டங்களோ கடனை பற்றி கதைக்கிறமே ஒழிய பொருளாதார திட்டங்களை பற்றி இதுவரைக்கு எந்த ஒரு கதையும் இல்லை மஹிந்தவ பொறுத்த மட்டில மன்னிப்பு கேட்டாவது திரும்பவும் மக்கள் மத்தியில வந்து தான் ஆதிக்க செலுத்த வேண்டும் என்ற கோர்வையில தான் இந்தியாவில் நடந்த அவர்களுடைய கூட்டத்தில் வந்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும் மக்களிடம் மன்னிப்புக்கேட்டாவது. மீண்டும் இந்த மக்களிடம் தான் வந்து காலூன்ற வேண்டும் என்ற முனைப்போடு தான் அவர்கள் செயற்ப்பட்டுக்கொண்டிருக்கின் றோம்.

ஆகவே அந்த சூழ்நிலை வரும் வரைக்கும் தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்த தான் பார்ப்பாங்க அதை மீறி என்ன நடக்கும் என்று எங்களுக்கு தெரியாது. நாட்டிற்கு இடதுசாரிகளினுடைய நிலையை எடுத்துக்கொண்டாலும் இடதுசாரி என்று இந்த நாட்டிலே இருக்கின்றவர்கள் வந்து இந்த போராட்டங்களுக்கு ஆதரவளிக்கின்றதை விட அவர்களும் இடதுசாரி என்ற பெயரில் இருக்கின்ற வாசுதேவ நாணயகார் போன்றவர்களும் கூட மஹிந்தவினுடைய பெருபான்மைக்கு ஆதரவு தொடர்ந்து தெரிவித்துக்கொண்டு தானே வருகின்றம். ஆகவே இதில வந்து நாங்கள் இந்த சூழ்நிலை வந்து அவர்களுக்கு சாதகமான ஒரு சூழ்நிலை இருக்கின்ற நேரத்தில அவர்கள் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்படுவதை தவிப்பார்களே ஒழிய அதற்கு வழி விட மாட்டார்கள் என்பது தான் என்ற கருத்து.

கேள்வி : இதிலே ஒரு விடயம் என்னவென்றால் குறிப்பாக கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதி தலைமை ஏற்ற பொழுது கொரோனா வைரசினுடைய தாக்கம் வந்து 2அரை வருடம்புரண்டோடிய பிற்பாடு விவசாயத்திலே பாரிய ஒரு வீழ்ச்சி ஏற்ப்பட்டு அந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முடியாமல் போன ஒரு சூழ்நிலையில் மீண்டும் ஊரடங்கு போன்ற பிரச்சனைகளால் இந்த நாடு ஒரு பாரிய பொருளாதார கட்டத்தை நோக்கியது.

ஆகவே நீங்கள் முன்னாள் விவசாய அமைச்சராக இருந்தவர் என்ற வகையிலே விவசாயம் செய்வதற்கான உரங்கள் தடையாக இருக்கின்ற காரணத்தினால் அவற்றை நிவர்ச்சி செய்து கொண்டு செல்ல முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. குறைந்தபட்சமாவது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டு இந்த வடகிழக்கு மற்றும ஏனைய மாகாணங்களிலும் விவசாயத்தை முன்னெடுப்பதனூடாக சிறந்ததொரு பொருளாதாரத்தை உருவாக்கி இந்த நாட்டை சீரான வழியில் கட்டியெழுப்புவதற்கான சாத்திய கூறுகள் ஏற்ப்படுதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றது அல்லவா?

பதில் : இன்றைக்கு இயற்கை வேளாண்மை உலகளாவிய ரீதியில் வந்து ஏற்றுக்கொள்ளும் ஒரு விடயம் அதனை எப்படி அமுல்படுத்துவது என்று பலரும் பலவிதமான கருத்துக்களை கொண்டிருக்கின்றார்கள். ஒரே நாளில் ஒரு விடயத்தை அமுல்படுத்த சட்ட ரீதியாக அமுல்படுத்துகின்ற விடயம் அல்ல ஆகவே இது படிபடியாக செய்ய வேண்டிய விடயத்தை வந்து திடீரென மேற்கொள்ளப்பட்டது தான் இதிலே மிகப்பெரிய தாக்கமாக உள்ளது ஆனால் இன்று நீங்கள் விவசாயத்தை பொறுத்தமட்டிலே விவசாயம் என்கிறது விவசாயத்தோடு வந்து பார்த்தீர்களானால் 40000 ரூபா காசு கொடுத்து யூரியாவை வாங்கி பயிர்செய்கை செய்கின்ற விவசாயிகள் தங்களுடைய நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இதற்கு காரணம் என்னவென்று பார்த்தால் உலக நாடுகளிடம் இருக்கின்ற மியன்மார் போன்ற நாடுகள் கூட இந்த நாட்டிற்கு இலவசமாக அரிசியை அனுப்பிக்கொண்டிருக்கின்றது.

இதுவும் நீங்கள் ஒரு காலக்கட்டத்தில் கேள்விப்பட்டு இருப்பீர்கள் அமெரிக்காவை பொறுத்த மட்டில் அமரிக்காவில் கோதுமை அதிகளவில் வருகின்றது என்றால் அதை கொண்டு போய் அவர்கள் சேமிப்பதை விட்டு விட்டு கடலிலே கொட்டுகின்றார்கள் என்ற கேள்வி இருக்கின்றது. இதற்கு காரணம் என்னவென்றால் அந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வைப்பதற்கும் உற்பத்தியாளர்களை சோர்ந்து போகாமல் பார்ப்பதற்கும் தான் இப்படியான வேலையை செய்து இருக்கின்றார்கள்.

11ஆம் பக்கம் பார்க்க...

நேர்காணல் : இரணியன்




# பிராந்திய செய்திகள்



## அத்தியாவசிய பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட திடீர் மாற்றம்

அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளில் திடீரென மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன்படி கொழும்பு புறக்கோட்டை மொத்த சந்தையில் பருப்பு, வெள்ளை சீனி உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் மேலும் குறைந்துள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன் 375 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 350 ரூபாவாக குறைந்துள்ளது.

அத்துடன் 290 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் மொத்த விலை 225 ரூபாவாக குறைந்துள்ளது. இந்த விடயத்தை அத்தியாவசிய இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை கோதுமை மா ஒரு கிலோகிராமின் மொத்த விற்பனை விலை 250 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தனர்.

எனினும் தற்போதும் புறக்கோட்டையில் கோதுமை ஒரு கிலோகிராம் 250 ரூபா முதல் 260 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புறக்கோட்டை அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் இதனை அறிவித்துள்ளது.



## பாலுறவு ஊக்க மருந்து பாவனை - வெளியான அதிர்ச்சித் தகவல்!

பாலுறவு ஊக்க மருந்து பாவனையினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மரண பரிசோதகர் இரேஷா தேஷானி சமரவீர தெரிவித்துள்ளார்.



இதற்கு பல முக்கிய காரணங்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாலுறவு ஊக்க மருந்துகளின் பயன்பாட்டினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாம் பார்க்கிறோம். தரமற்ற மருந்துகளின் பயன்பாடு, தவறான அளவு மற்றும் மருத்துவ ஆலோசனையின்றி மருந்துகளைப் பயன்படுத்துவதே இந்த இறப்புகளுக்கு முக்கியக் காரணமாகும்.

"20-25 வயதிற்குட்பட்டவர்களும் மற்றும் 40-45 வயதிற்குட்பட்டவர்களும் இவ்வாறு பாதிக்கப்படுகின்றனர். "பல இளைஞர்கள் இந்த பாலுறவு ஊக்க மருந்தினை பரிசோதனைக்காகப் பயன்படுத்துகின்றனர். "மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று சம்பவங்கள் பதிவாகின்றன. இது உண்மையில் அதிக எண்ணிக்கை, எனவே நாங்கள் இது குறித்து விசேடமாக கவனம் செலுத்த வேண்டும்."

## 12 பேருக்கு எதிராக சிவப்பு பிடியாணை!

வெளிநாடுகளில் இருந்து இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் 12 பேருக்கு சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அவர்களில் சிலர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.




கம்பஹா மாவட்டக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஷான் பிரேமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் நெருக்கமாக செயற்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக இதில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

## விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பு!

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் 7070 மெற்றிக் தொன் நெல் இருப்பு உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.



நாட்டில் போதியளவு அரிசி கையிருப்பு இருப்பதால் எதிர்காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இல்லை என அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்தையில் அரிசியின் விலையினை கருத்தில் கொண்டு, அரிசியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த தேவைப்பட்டால், நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பு அரிசியாக மாற்றப்படும் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சந்தையில் அரிசியின் விலை உயர்வை கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும், அரிசி இறக்குமதி மற்றும் உதவியாக வேறு நாடுகளில் இருந்து அரிசி தொகை பெறப்பட்டமையினால் இது நிகழ்ந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

## பாடசாலைக்கு முன்பு கழிவுகளை வீசியவருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம் புனித ஜோன், பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக மனித மலக்கழிவு உள்ளிட்டவற்றை வீசியவர் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை முன்பாக இன்றைய தினம் பம்பஸ் உள்ளிட்ட கழிவுகள் வீசப்பட்டிருந்தன. அதனால் பாடசாலைக்கு அருகில் வசிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

அது தொடர்பில் மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மாநகர சபை சுகாதார ஊழியர்கள் அவற்றை அகற்றும் போது, அதனுள் மோட்டார் சைக்கிள் காப்புறுதி அட்டை ஒன்று மீட்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கழிவுகளை அவரே வீசி இருக்கலாம் என சந்தேகிப்பதனால் அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வேகமாக அதிகரித்து வரும் வாகன திருட்டுகள் சம்பவங்கள்

அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வறுமைக்கு மத்தியில், வாகனத்திருட்டுகள் வேகமாக அதிகரித்து வருவதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

இதில் மோட்டார் சைக்கிள் திருட்டுகள் அதிகமாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பதிவான மொத்த வாகனத் திருட்டுகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டு மட்டும் பதிவான மொத்த எண்ணிக்கையை விட அதிகமாகியுள்ளன.



2021ஆம் ஆண்டில் மொத்தம் 1,405 வாகனத் திருட்டுச் சம்பவங்கள் காவல்துறையில் பதிவாகியுள்ளன. இதில் ஒன்பது பேருந்துகள், ஆறு வேன்கள், பத்து லொறிகள், 34 கார்கள், 353 முச்சக்கர வண்டிகள், 975 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 18 வாகனங்கள் அடங்கியிருந்தன.

மொத்த வாகனத் திருட்டுகளின் எண்ணிக்கை இந்த வருடம் செப்டெம்பர் மாதம் வரை பதிவான மொத்த வாகனத் திருட்டுகளின் எண்ணிக்கை 1,406 என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதில் 12 பேருந்துகள், 25 வேன்கள், 16 லொறிகள், 14 கார்கள், 311 முச்சக்கர வண்டிகள், 1,016 மோட்டார் சைக்கிள்கள் இதில் உள்ளடங்கியுள்ளன.

பெரும்பாலான திருட்டுகள் வாகனங்களின் உரிமையாளர்களின் அலட்சியத்தால் நடைபெறுகின்றன என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனங்கள் தொடர்பாக பொலிஸாரிடம் தெரிவிக்கப்படும் பெரும்பாலான முறைப்பாடுகள், "திருட்டுகள்" தவிர, "கொள்ளைகள்" அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வாகன உதிரிபாகங்களின் விலை அதிகரித்துள்ளதால் வாகன திருட்டுகள் அதிகரித்துள்ளன. எனவே வாகன உரிமையாளர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும், யாராவது தங்கள் வாகனங்களை எளிதில் திருடுவதை தவிர்க்கும் வழிகளை கையாளுமாறும் பொலிஸ் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார்.



# சினிமா துளிகள்



## முதல்முறையாக அஜித்தின் திரைப்படத்தை தயாரிக்கும் பிரம்மாண்ட நிறுவனம்!

தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமாக திகழ்ந்து வருபவர் நடிகர் அஜித். இவர் நடிப்பில் வெளியாகும் திரைப்படங்கள் தொடர்ந்து ரசிகர்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

அந்த வகையில் வலிமை திரைப்படத்தை தொடர்ந்து அஜித் மீண்டும் இயக்குநர் எச். வினோத் இயக்கத்தில் துணிவு திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

பெரிய எதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ள இப்படம் வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியாக இருக்கிறது. இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.

பிரம்மாண்ட நிறுவனம்

இந்நிலையில் துணிவு திரைப்படத்தை தொடர்ந்து அஜித் இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில அவரின் 62-வது திரைப்படத்தில் நடிக்க இருக்கிறார். ஆனால் அப்படம் எப்போது தொடங்கும் என்பது குறித்த எந்த ஒரு தகவலும் வரவில்லை.

இதற்கிடையே தற்போது அஜித் 63-வது திரைப்படம் குறித்த தகவல் இணையத்தில் பரவி வருகிறது. ஆம். அதன்படி அஜித் மீண்டும் அவரின் வெற்றி திரைப்படங்களின் இயக்குநர் சிவா இயக்கத்தில் நடிக்க இருப்பதாகவும்.

அப்படத்தை பிரம்மாண்ட தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ் தயாரிக்க இருப்பதாகவும் தகவல் பரவி வருகிறது.



## உலகளவில் கடந்த 6 நாட்களில் ப்ரின்ஸ் செய்துள்ள வசூல்..

சமந்தா நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'யசோதா'. இந்த படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி சமூக வலைதளத்தில் கவனம் ஈர்த்து வருகிறது.

இயக்குனர் ஹரி-ஹரிஷ் இயக்கத்தில் நடிகை சமந்தா நடித்துள்ள படம் "யசோதா". பான் இந்தியா திரைப்படமாக உருவாகியுள்ள இந்த படத்தில் வரலட்சுமி சரத்குமார், உன்னி முகுந்தன், ராவ் ரமேஷ், முரளி சர்மா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கின்றனர்.



யசோதா திரில்லர் வகை கதையம்சம் கொண்ட இந்த திரைப்படத்தில் சமந்தா எழுத்தாளர் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

"யசோதா" படத்தை சிவலெங்க கிருஷ்ண பிரசாத் தனது ஸ்ரீதேவி மூவிஸ் நிறுவனம் மூலம் தயாரித்துள்ளார். மணிஷர்மா இசையமைத்துள்ளார். இப்படத்தின் டீசர் அண்மையில் வெளியாகி வைரலானது.

இதையடுத்து "யசோதா" படத்தின் டிரைலர் அன்று மாலை 5.36 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி, இந்த படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. இதனை நடிகர் சூர்யா தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

வாடகைத் தாய்க்கு ஏற்படும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவது போன்று உருவாகியுள்ள இந்த டிரைலர் சமூக வலைதளத்தில் கவனம் ஈர்த்து வருகிறது.

## உலகம் முழுவதும் கார்த்தியின் சர்தார் மொத்தமாக செய்த வசூல் தான் எவ்வளவு?

சிவகார்த்திகேயனை வைத்து ஹீரோ. விஷாலை வைத்து இரும்புத் திரை படங்களை இயக்கிய மித்ரன் கார்த்தியை வைத்து இயக்கிய திரைப்படம் தான் சர்தார்.

கார்த்தி 2 கதாபாத்திரங்களில் நடிக்க ராஷி கண்ணா இப்படத்தில் நாயகியாக நடித்துள்ளார்.

கார்த்தியை போலீஸாக பார்க்க மக்களுக்கு மிகவும் பிடிக்கும். அதேபோல் இந்த படத்திலும் அவரை ரசிகர்கள் ரசித்துள்ளார்கள்.

நாளுக்கு நாள் படத்திற்கான வரவேற்பும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

தீபாவளி ஸ்பெஷலாக பிரின்ஸ் திரைப்படமும் வெளியாக கார்த்தியின் சர்தாரும் வெளியாகி இருந்தது.

மொத்த வசூல்

கடந்த அக்டோபர் 21ம் திகதி வெளியான இப்படம் உலகம் முழுவதும் ரூ. 55 கோடி வரை வசூலை எட்டிவிட்டதாக தகவல்கள் வருகின்றன. படத்திற்கு நல்ல விமர்சனங்கள் வந்துள்ள நிலையில் கண்டிப்பாக வசூலில் பெரிய சாதனை படைக்கும் என்கின்றனர்.



## உலகளவில் கடந்த 6 நாட்களில் ப்ரின்ஸ் செய்துள்ள வசூல்..

சிவகார்த்திகேயன் நடிப்பில் கடந்த 21ஆம் திகதி வெளிவந்த திரைப்படம் ப்ரின்ஸ். தெலுங்கு இயக்குனர் அனுதீப் இப்படத்தை இயக்கியிருந்தார்.

முதல் முறையாக உக்ரைன் நாட்டு நடிகை மரியா ப்ரின்ஸ் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகியுள்ளார்.


மேலும், இப்படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் சத்யராஜ், பிரேம்ஜி ஆகியோர் நடித்துள்ளனர்.

பெரிதும் எதிர்பார்ப்பில் வெளிவந்த இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில், ப்ரின்ஸ் திரைப்படம் வெளிவந்து ஆறு நாட்கள் முடிவடைந்துள்ள நிலையில், உலகளவில் சுமார் ரூ. 42 கோடிக்கும் மேல் வசூல் செய்து பாக்ஸ் ஆபிசில் சாதனை படைத்துள்ளது.



# மழையிலே மலரும் பூக்கள்



மஞ்சள் சூரியன் மெல்ல எழுந்து எட்டி பார்த்து இளம் வெயிலை என் ஜன்னல் வழியே நீட்டி வேலைக்கு செல்ல டா என்று சொல்பவன் இன்று இன்னும் காணவில்லயே. கண்ணை நிமிட்டிய படியே எழுந்து சுவரில் சாய்ந்து தூக்க போதையை தனித்து உடலை முறுக்கி எழுந்தேன். உன் வியர்வையை தணிக்க ராத்திரி எல்லாம் என்னை தலை சுற்ற வைக்கிறாயே! என்று புலம்பி கொண்டே அந்தரத்தில் சுற்றி கொண்டிருந்த சீலிங் ஃபேனை போதும் போய் ஓய்வெடு என்று சொல்லி நிறுத்தி விட்டு நானும் தயாரானேன்.

தலையை திருகி இரண்டு தட்டு தட்டியும் தண்ணீர் வராத குழாயை முறைத்து பார்த்து நிற்க. போதும்... போதும்... கோபத்தில் என்னை உடைத்து விடாதே என பதறி கொப்பளித்து கொட்டியது தண்ணீரை. கோடை காலத்தில் கூட பச்சை தண்ணீரில் குளிக்காத நான் இந்த குளிர் காலத்தில் எப்படி ? பயத்தோடு வாளியில் ததும்பும் நீரில் கையை நனைத்து உடல் சிலிர்த்து புலியை பார்த்து மருகும் மானை போல தவிக்கிறேன். சூத்திரங்கள் சொல்லி முனிவரை போல போதித்ததெல்லாம் போதும் படாரென்று தண்ணீரை தலையில் எடுத்து ஊத்திக்கொள்ள. உடலோடு பிணைந்த என் ஆத்மா பயந்து என்னை விட்டுவெளியே ஓட அதை இழுத்து பிடித்து இறுக்கிக் கட்டிக்கொண்டேன்.

அறுபது புள்ளிகளை சுற்றி வரும் அந்த கடிகாரத்தின் மணி முள்ளும் வேகமாக ஒன்பதரையில் வந்து நின்றது. மூன்றடி பையில் பார்சல்களை நிரப்பிய நானும் அறுகால் அருகே வந்து நின்றேன். தினமும் என்னை எழுப்பி விடும் என் நண்பன் சூரியனுக்கு இன்று குளிர் காய்ச்சல் போல. அதான் அவன் தோழி மேகத்திடம் சேதி சொல்லி அனுப்பியிருக்கான்.

கொட்டும் தூரலில் நனைந்த படியே என் அருகாமை வந்த தம்பி காரன் உடலை உலுக்கி தன் மேலிருந்த தண்ணீரை தரையில் சிதறிடித்தான். வாலை ஆட்டி என்னை பார்த்து முன்னங்காளில் ஒரு கோடு போட்டு குறைத்து சொன்னான் வேலைக்கு செல்ல வேண்டாம் என்று. ஃபோன் செய்து ஓனரிடம் மழை பெய்யும் விவரத்தை சொல்ல மனசாட்சி இல்லாத அவரோ மனசாட்சியோடு மழை கோட் போட்டு கொண்டு மழையில் பார்சல்களை டெலிவரி செய்ய சொல்ல மனதுக்குள்ளே முனுமுனுத்து கொண்டேன். கோவமாக. முடிவெடுக்காத இடத்தில் இருக்கும் நான் முதலாளி முடிவின் படி பையை மாட்டி கொண்டு புறப்பட்டேன்.

துவ்வானம் தூரும் இந்த தூரல் மழைத்துளிகளோ என் வண்டி மேலே பட்டு துள்ளி குதித்து எழுப்பும் ஓசையை என் காதுகள் ஆர்ப்பரிக்க சில துளிகளோ என் மீது குண்டூசி யாய் பாய்ந்து குத்தவும் செய்கிறது. தலை நனைந்து முடிகள் எல்லாம் ஒவ்வொரு கூட்டமாக பிரிந்து தண்ணீரை சொட்டு சொட்டாக சுரக்க அவை என் கண் மேலே பட்டு பார்வையை மறைக்கிறது. எந்த கவலையும் இல்லாமல் வீட்டுக்குள்ளே இருந்து நிதானமாக வழி சொல்லும் பேரில் என்னை கோபமுற செய்யும் சில கஸ்டமர்கள். மழையிலும் உழைக்கும் என்னை பாவத்தோடு பார்த்து பணம் கொஞ்சம் கொடுத்த கஸ்டமர்கள். பத்து தடவை ஃபோன் செய்தும் கண்டு கொள்ளாத கஸ்டமர்கள் என எல்லாம் கடந்து வேலையை முடித்து ஒரு வழியாக வந்து சேர்ந்தேன் தினமும் என்னை உபசரிக்கும் டீ கடைக்கு .

சுக்கும், ஏலமும் மிதமாக வெந்நீரிலே கலந்து அதில் பசும் பாலை ஊற்றி பச்சை வாசம் போகும் வரை கொதிக்க விட்டு டீ தூளை தூவி சில்வர் டம்ளரிலே கொண்டு வந்து கொடுத்த குட்டி அண்ணனிடம் வாங்கி கொண்டேன். என் இரு உள்ளங் கையிலும் டம்ளரை இருக்கி பிடித்து அந்த சூட்டில் எந்தன் குளிரை போக்க காற்றில் பறந்து வந்த சாரல் துளிகள் மீண்டும் என்னிடம் குறும்புகள் செய்ய கோபம் கொள்ளாமல் அதை ரசிக்க தொடங்கினேன்.

திரள் திரளாய் திரண்டு கிடக்கும் கருமேகங்களுக்கு மத்தியில் ஊரே கொஞ்சம் இருண்டு கிடக்க சிலு சிலுவென வீசும் சாரல் காற்றிலே குதித்து வரும் மழை துளிகள் அந்த நான்கு சக்கர தள்ளு வண்டி மேலே கிடக்கும் ரோஜா மலர்கள் மீது பட்டுச் சிதற சிவப்பு நிற குடையின் கீழே அமர்ந்த படி அதை ரசித்து கொண்டிருந்த அவளை இன்று ஏதோ வித்தியாசமாக பார்த்து கொண்டு இருக்கிறேன்.

குடையின் மேலே பட்டு வழிந்து வந்து கீழே விழ போகும் வான் மழை தண்ணீரிடம் கையை நீட்டி சண்டை செய்கிறாள், அவள். அப்போது அவள் கைகளின் கண்ணாடி வளையல்கள் சிணுங்கி சத்தம் போட. அச்சத்தம் கேட்டு இசை என எண்ணி ஊசலாடும் அவளின் காதணிகள். அந்த காதோரம் பறக்கும் தலைமுடிகளை காது மடல்களுக்கு இடையே ஒதுக்கும் வண்ணம் பூசிய அவளின் சின்ன விரல்கள். வளைந்த இரு புருவங்களுக்கு மத்தியல் ஒரு கருப்புநிற பொட்டு. கீழே சின்ன கண்கள். கோபப்பட்டால் சிவக்கும் மூக்கின் மேலே மின்னும் மூக்குத்தி. அவள் முன்பு உள்ள சிவப்பு ரோஜாக்களும் தலை குனிந்து கொண்டன. அவள் உதடுகளின் நிறத்தை பார்த்து. அந்த பச்சை நிற சேலையை அவள் ஆசை பட்டு கட்டி கொண்டாளா ? அல்ல அவள் மேல் ஆசை கொண்ட சேலை அவளை இறுக்கி கட்டி கொண்டதா ? எது என்னவோ பச்சை நிறம் போர்த்திய பனி மலர் இவள் என்று எண்ணும் அளவுக்கு கொள்ளை அழகு.

நிமிர்ந்து நிற்கும் குடையின் தலையில் ஆங்காங்கே கிழிந்த துவாரங்கள் வழியே பொழியும் இந்த மேகமழைத் தூரல்களில் அவளோடு சேர்ந்து நனையவே எண்ணுகிறேன். நிரந்தரமாக. என்று மூளை கவிதையை சொல்ல. படபடவென துடித்து ஆர்பரித்தது இதயம் காதலை சொல்ல. ஆனால் கண்கள் சொன்னது அவளின் நெற்றி நடுவில் உள்ள பொட்டின் காரணத்தை. என்னிடத்தில் மௌனம் மட்டுமே.

சில நிமிடங்களில் கொட்டும் தூறல் நின்றது . மாடி கட்டிடங்களுக்கு உள்ளே ஒளிந்த பறவைகள் மீண்டும் வானில் வட்டமிட தொடங்கின. காலியான சாலையில் மக்கள் நகர ஆரம்பித்தனர். அவர்களோடு சேர்ந்து நானும் நகர்ந்தேன். இதயத்தை இழந்து விட்டு ...



# மலையகம் : அடுத்து என்ன?

## – வி.தேவராஜ்–



கடந்தவார தொடர்ச்சி...

கடந்த 74 வருடங்களுக்கு மேல் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் வடக்குக் கிழக்கு மக்களே 'சிஸ்டம் சேன்ஜ்' தமக்கு ஒன்றும் கொண்டு வந்துவிடாது என ஒதுங்கி இருக்கும் போது நீங்கள் மலையக மக்களுக்கு இதன்மூலம் பெற்றுக் கொடுக்க முயல்வது என்ன?

ஆற்றைக் கடக்க முயன்ற தொழிலாளர்களும் அவர்களது பிள்ளைகளும் அள்ளுண்டு போனதை தொலைக்காட்சிகள் உங்கள் கண் முன் காட்டிய போது நீங்கள் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக அமைச்சர்களாக இராஜாங்க அமைச்சர்களாக இருப்பதுமக்கள் ஆற்றிலும் மண்சரிவிலும் அள்ளுண்டுபோவதைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவா? என மக்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் கூறுங்கள்.

சில வேளைகளில் உங்களில் பலருக்கு அமைச்சுப் பதவிகளுக்கான கதவுகளைத் திறப்பதாக 'சிஸ்டம் சேன்ஜ்' இருக்கலாம். பதுளை மாவட்டத்தில் ஒரு தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய ஒரு மலையக தொழிற்சங்க அரசியல்வாதி கூறிய வார்த்தை இது.

'இப்பொழுது நான் ஒரு எம்பியாக உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன் அடுத்த முறை நான் ஒரு அமைச்சராக உங்கள் முன் நிற்பேன்' என்று கூறியதை இங்கு பதிவு செய்கின்றேன்.

மொத்தத்தில் மலையக தொழிற்சங்க வரலாற்றில் நடேச ஐயர் காலம் ஒரு சகாப்தம். வெள்ளையன் இராஜலிங்கம் காலம் அப்பழுக்கற்ற அரசியலின் சின்னம்.

சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் பலம் பலவீனம் இதற்கப்பால் ஒரு சகாப்தம்.'கிங் மேக்கர்' அரசியலை உருவாக்கியவர்.

தங்கத்தை உரசலாம் வெற்றுக் கோதுகளை?

இந்த வரிசையில் இன்றைய மலையக தொழிங்சங்க அரசியலின் சாதனை என்ன? தங்கத்தை உரசிப் பார்த்து அறியலாம். துரதிஷ்டவசமாக உரசிப் பார்த்து அறியும் நிலையில் இல்லை. ஒன்றும் இல்லா 'கோது' என்பதை மக்கள் அறிவர்.

இதனை வெளிப்படையாக மக்கள் கூறுகின்றனர். தொலைக்காட்சிகளில் கோபக் கனல் கக்க' மக்கள் மலையக அரசியல்வாதிகள் மீது கொப்பளிக்கும் வார்தைதைகளே இதற்குச் சான்று.'

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் அரசியல் 'சிஸ்டம்' மலையக மக்களை எவ்வாறு வைத்திருக்கின்றது என்பதை தோலுரித்துக் காட்டுவதே ஐநா அறிக்கை. இன்று தென்னிலங்கை கோரி நிற்கின்ற 'அரகலயா சிஸ்டம் சேன்ஜ்சில்' வடக்குக் கிழக்கு மக்கள் பற்றியோ முஸ்லிம் மக்கள் பற்றியோ பேசவில்லை. மலையக மக்களை ஆர்ப்பாட்டத்தில் இறக்கிய மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் மலையக மக்கள்பற்றி 'அரகலயா' தமது நிகழ்ச்சி நிரலில் என்ன கூறி இருக்கின்றதென தெளிவுபடுத்த வேண்டும்.

அதற்காக 'அரகலயா சிந்தனை' தேவையில்லை என்பதல்ல அர்த்தம். இந்த சிந்தனைமூலம் தென்னிலங்கை தமக்கான அரசியல் ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ள முயல்கின்றது. ஜனநாயகத்தின் குறைந்தபட்ச இந்தக் கோரிக்கைக்கே இன்று பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு 'அரகலயா போராட்டக்காரர்கள்' பயங்கரவாத தடைச் சட்டத்தின்மூலம் வேட்டையாடப்படுகின்றனர்.

மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளே மலையக மக்களை வைத்து அரசியல் செய்து உங்களுக்காகவும் உங்களைச் சார்ந்தோருக்காகவும் 'அறுவடையாக்கியது' போதும். நீங்கள் மலையகத்திற்கு போதிக்கின்ற 'சிஸ்டம் சேன்ஜில்' ஊழல் மோசடி என்பனவும் முக்கிய அம்சமாக உள்ளது என்பதை உங்கள் முன் வைக்க விரும்புகின்றோம்.

உங்களின் நேர்மைக்கு உங்களின் மனச்சாட்சிமாத்திரமல்ல மக்களும் சாட்சியாக உள்ளனர்.

இன்றைய மலையகத் தலைமைகளே இனிவரும்காலத்தையாவது'மக்களுக்கான அரசியலை' செய்ய வாருங்கள். உங்களால் மலையகத்திற்கென புதிய அத்தியாயத்தை உருவாக்க முடியும். அது உங்களில் ஏற்படுகின்ற மனமாற்றத்திலும் அர்ப்பணிப்பிலுமே தங்கியுள்ளது.

மலையகம் குறித்து இன்றைய இளம் தலைமுறையினருக்கும் மலையக நலன் விரும்பிகளுக்கும் ஒரு வேண்டுகோள் !மலையகத்தை தலைமை ஏற்று வழி நடத்த தயாராகுங்கள். -நமது மலையகம்

07ஆம் பக்க தொடர்ச்சி...

இவர்களை பொறுத்தமட்டிலே இங்கு மிதமாக நெல் இருக்கின்ற போதும் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற நெல்களை வாங்கி தரகு முதலாளித்துவம் மூலம் இங்கு குறைந்த விலையில் விற்பனை செய்வதன் மூலம் அதனுடைய தரகுப்பணங்களைவ வந்து இன்டைக்கு இருக்கின்ற 75வீதமான பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரத்தில் ,ருக்கின்றவர்களுக்கு ஓரளவுக்கு நம்பிக்கை அவநம்பிக்கை ஏற்ப்பட்டிருக்கின்றது தாங்கள் மீண்டும் தெரிவுசெய்யப்படுவோமா என்று ஏனென்றால் இன்று இருக்கின்ற பொருளாதார நிலை மட்டுமல்ல இந்த ஆளும் கட்சி மீது மக்கள் கொண்டிருக்கின்ற விரக்தியால் தாங்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட முடியாது.

ஆகவே இருக்க கூடிய மிச்சத்தையும் எப்படி சுருட்டலாம் என்ற போக்கிலே தான் இவர்களுடைய போக்கு இவர்கள் எப்படி பொருளாதாரத்தை கொண்டு நடத்தப்போகின்றார்கள் என்பது சாத்தியப்படாத ஒரு விடயம் நிச்சயமாகவே இப்பொழுது இருக்கின்ற அரசை முற்றுமுழுதாக இல்லாமல் செய்து மீண்டும் ஓரளவு நான் நினைக்கின்றேன் 100வீதம் இல்லாவிட்டாலும் ஒரு குறைந்தளவு வீதத்திலெ இந்த நாட்டிலே அக்கறை கொண்டவர்களை தெரிவு செய்வதன் மூலம் அதிலே ஒரு முன்னேற்றம் இருக்கலாமே தவிர இப்பொழுது இருக்கின்ற அரசோ அல்லது இன்றைக்கு இருக்கின்ற அரசு ஒரு போது இந்த பொருளாதாரத்தை சீர்செய்ய முடியாது அதுமாத்திரமல்ல இந்த சூழ்நிலையை இவர்களால் எந்த நேரத்திலும் மாற்ற முடியாது என்பது தான் என்னுடைய கருத்து.

கேள்வி : இந்த அரசாங்கத்திலுமே வடக்கிழக்கிலே குறிப்பாக பார்க்கின்ற பொழுது சிங்கள திட்டமிட்ட குடியேற்றங்கள் பௌத்த விகாரைகள் அமைத்தல் போன்ற விடயங்களும் இடம்பெற்றுக்கொண்டு தானே இருக்கின்றது. தொடர் கைதுகள் இடம்பெறுகின்றது. போராளிகள் மீண்டும் கைது செய்யப்படுகின்றார்கள் இவ்வாறான ஒரு தன்மை ஏற்படுமாக இருந்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்காத அதாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போதியளவிலே குரல் கொடுக்காத ஒரு சூழ்நிலை தானே காணப்படுகின்றது.

பதில் : இதை பொறுத்தமட்டிலே இந்த அரசு மாத்திரம் அல்ல எல்லா அரசுகளும் பேராதிக்கவாதிகளினுடைய கைக்கூலிகளாக தான் எல்லா அரசுகளும் வந்து இலங்கையில் இருந்து கொண்டு இருப்பது தான் எங்களுடைய இந்த நிலைமைக்கு காரணமாக இருக்கின்றது. இன்றைக்கு இருக்கின்ற அரசும் அதை தான் செய்கின்றது. ஆனால் அரச இயந்திரங்கள் பலவீமடைந்திருக்கின்ற இந்த நேரத்தில இந்த பேரினவாத சக்திகள் தங்களுடைய செயற்பாடுகளை தீவரப்படுத்தி இருக்கின்றார்கள்.

அதிலே எந்த விதத்திலோ மாற்றங்கள் இல்லை. இந்த நாட்டிலே பலதேசிய தன்மை உரவாக வேண்டும் என்பதில் அவர்கள் அக்கறை இல்லாமல் இருக்கின்றார்கள். எந்த சூழ்நிலை வந்தாலும் அதிலே மிக தெளிவாக பௌத்த பேரினவாதிகள் தங்களுடைய செயற்பாட்டை மீண்டும் தீவிரமாக கொண்டு செல்ல கூடியதாக இருக்கின்றது. இதற்கு இந்த அரசு மட்டுமல்ல இலங்கை சுதந்திரமடைந்த பிறகு வந்ந எல்லா அரசுமே பௌத்த பேரினாவாதத்தினுடைய கைக்கூலிகளாக தான் தெடர்ந்து செயற்ப்பட்டு வந்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பது தெள்ளத்தெளிவானது.

## வாழ்க்கை தத்துவங்கள் பொன்மொழிகள்

பேராசை கொண்டவன் எதிலும் திருப்தி அடைய மாட்டான். திருப்தியே மேலான செல்வம்.
ஐம்புலன்களுக்கு அடிமையாவது நல்லதல்ல. அவற்றை ஆட்சி செய்யும் நிலைக்கு மனிதன் உயர வேண்டும்.

எந்த செயலில் ஈடுபட்டாலும் அதன் விளைவாக இன்பமும் துன்பமும் இணைந்தே உண்டாகும்.

பிறரிடம் கையேந்துபவனை விட பிறருக்கு உதவ மனமில்லாமல் இல்லை என்று மறுப்பவனே இழிந்தவன்.

உடல் தூய்மையை விட மனத்தூய்மையே அவசியமானது. இதயத்தை நல்ல எண்ணத்தால் நிரப்பு.

பிறரின் இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள். மற்றவர் துன்பத்தில் பங்கேற்று உதவி செய்.

பொருள் இல்லாதவன் ஏழையல்ல. எப்போதும் மனதில் ஆசையைச் சுமந்து திரிபவனே ஏழை.

அறிவு என்னும் கதவு திறந்தால் மட்டுமே அறியாமை என்னும் திரை அகலும்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போல நல்லவனும் ஒரு தீய குணத்தால் ஒழுக்கமற்றவனாக ஆகி விடுவான்.

பிறருடைய குற்றம் காண்பதிலும் பிறரைக் குறை சொல்வதிலும் நேரத்தை செலவிடாதீர்கள்.

மேடு பள்ளம் நிறைந்தது தான் உலகம். அது போல இன்ப துன்பம் நிறைந்தது தான் மனித வாழ்க்கை.


மனிதனின் உடன்பிறந்த இயல்பு ஆசை. அதை படிப்படியாக திருத்திக் கொண்டால் மட்டுமே வாழ்வில் உயர முடியும்.

யாரையும் வெறுப்பது கூடாது. அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். தனித்து வாழாதீர்கள். மனம் விட்டு பிறரிடம் பழகுங்கள்.


எல்லாருக்கும் மதிப்பளிப்பதோடு, அவர்களின் வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பதே சிறந்த நாகரிகம்.

நல்லவர்களுடன் நட்பு கொள்ளுங்கள். நல்லறிவு தரும் நூல்களைப் படியுங்கள்.

நாக்கைக் கட்டுப்படுத்தினால் உள்ளத்தையும், உடலையும் எளிதாக வசப்படுத்த முடியும்.




# பல்சுவை கதம்பம்



## பருக்களை உடனடியாக போக்க உதவும் சில வழிகள்!

முகத்தில் சீழ் நிறைந்த பருக்கள் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. அதில் சருமத்தில் அதிகளவு எண்ணெய் சுரப்பு, அதிகமான மேக்கப், தூசிகள் மற்றும் அழுக்குகளால் சருமத் துளைகள் அடைப்பது, மரபணு காரணங்கள், சருமத்தில் இறந்த செல்களின் தேக்கம் அதிகரித்தல், ஹார்மோன் மாற்றங்கள், அதிகமாக வெயிலில் சுற்றுவது போன்றவை குறிப்பிடத்தக்கவை.



ரோஸ் வாட்டர் சந்தனப் பவுடரை ரோஸ் வாட்டர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, பருக்களும் மறைந்துவிடும்.

தினமும் சீழ் நிறைந்த பருக்களின் மீது சிறிது தேனைத் தடவி மசாஜ் செய்து, 1 மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனால் சருமத்துளைகளில் உள்ள அடைப்புக்கள் நீங்கி, சருமத்துளைகள் சுத்தமாகும்.

கற்றாழை ஜெல்லை தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி மசாஜ் செய்து, மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி ஒரு மாதம் தொடர்ந்து பின்பற்றினால், முகம் பருக்களின்றி பிரகாசமாக இருப்பதைக் காணலாம்.

விளக்கெண்ணெயை சிறிது வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். ஒருவேளை விளக்கெண்ணெய் சற்று அடர்த்தியாக இருப்பது போல் இருந்தால், ஆலிவ் ஆயிலுடன் சேர்த்து கலந்து பயன்படுத்துங்கள்.

உருளைக்கிழங்கை வட்ட துண்டுகளாக்கி, ஃப்ரிட்ஜில் சிறிது நேரம் வைத்து, பின் அதை எடுத்து முகத்தை மசாஜ் செய்து, சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இல்லாவிட்டால், உருளைக்கிழங்கு சாற்றினை முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இப்படி செய்வதன் மூலமும் பருக்கள் நீங்கி, முகம் அழகாக இருக்கும்.

வெந்தயக் கீரையை சிறிது எடுத்து அரைத்து, அத்துடன் தயிரை சிறிது சேர்த்து கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

## முள்ளங்கி கீரையின் மருத்துவ நன்மைகள்

முள்ளங்கி மட்டுமல்லாமல், அதன் இலை, தண்டுகள், விதை அனைத்தும் மருத்துவத் தன்மை கொண்டவை. முள்ளங்கிக் கிழங்கின் மேல் பக்கம் தழைத்து வளர்ந்திருக்கும் இலைகளைதான் முள்ளங்கிக் கீரை என்கிறோம்.

முள்ளங்கி கீரை நீரிழிவு நோய்க்கு சிறந்த மருந்தாகும். மலச்சிக்கலைக் குணப்படுத்தும் ஆற்றல் முள்ளங்கி கீரைக்கு உண்டு.



கல்லீரலில் உண்டாகும் பலவிதமான கோளாறுகளை முள்ளங்கி கீரை குணப்படுத்தும். முள்ளங்கி கீரையானது இருதயத்திற்கு பலம் சேர்க்கும். மேலும் இதயம் பாதிக்கப்பட்டவர்கள், இதயப் படபடப்பு, இதய பலவீனம் உடையவர்கள் வாரம் ஒரு முறையாவது இக்கீரையை உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.
சநஉழஅஅநனெநன டில

முள்ளங்கிக் கீரையை அடிக்கடி உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வை பலப்படும். வைட்டமின் பற்றாக்குறைகளும் நீங்கும். சிறுநீர் சரியாக பிரியாமல் இருப்பவர்கள் ஒரு ஸ்பூன் பார்லியை முள்ளங்கிக் கீரையுடன் சேர்த்து வேகவைத்துச் சாப்பிட்டால் நீர்க்கட்டு நீங்கி சிறுநீர் தாராளமாகப் பிரியும்.

மலச்சிக்கலால் அவதிப்படுபவர்கள், முள்ளங்கிக் கீரையின் சாற்றை 1 ஸ்பூன் எடுத்து 3 வேளைகளும் சாப்பிட்டு வந்தால் நல்ல முன்னேற்றம் தெரியும்.

**கண்கள் கூட கவிதை பேசும்**
**உன்னை பார்க்கும் போது**
**ஆனால்**
**கவிதை கூட கண்ணீர் சிந்தும்**
**உன்னை பிரிகையில்...**

**உன் மடியில்**
**தலை சாய்ந்திருக்கும்**
**இந்த நொடி போதும் பெண்ணே**
**இந்நொடி என் உயிர் போனாலும்**
**சந்தோஷம் நாளை என்ற கனவு**
**களைந்து போகட்டும்**

## இயற்கை அழகு குறிப்புக்கள்!

**இறந்த தோல் செல்கள் –கடலை மாவு:**

இறந்த தோல் செல்கள், மற்றும் வெயிலால் பாதிக்கப்பட்ட சருமத்திற்கு, இருக்கு கடலை மாவு. தெளிவான, மென்மையான மற்றும் இயற்கையாக ஒளிரும் சருமத்தை நீங்கள் பெற விரும்பினால், ஒரு பாத்திரத்தில் சம அளவு கடலைமாவு மற்றும் தயிரை எடுத்து அவற்றை நன்கு கலந்து பேஸ்ட் செய்யுங்கள். இந்த பேஸ்ட்டை உங்கள் முகம் மற்றும் கழுத்தில் சமமாக தடவவும், தண்ணீரில் கழுவும் முன் அரை மணி நேரம் உலர விடவும். இது இறந்த சரும செல்கள் மற்றும் ஆழமான அழுக்குகளை அகற்றும், இதனால் உங்கள் சருமத்தின் பிரகாசமாக இருக்கும்.

**எண்ணெயைக் கட்டுப்படுத்த தக்காளி**

இந்தியா போன்ற ஒரு நாட்டில் வானிலை பெரும்பாலான பகுதிகளில் ஈரப்பதமாக இருக்கும், அதிகப்படியான எண்ணெய் சருமம் உள்ளவர்கள் மிகவும் பொதுவானவர்களே. லைகோபீனுடன் செறிவூட்டப்பட்ட, தக்காளியில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் உள்ளன. மேலும் சிறந்த குளிரூட்டும் மற்றும் அஸ்ட்ரிஜென்ட் பண்புகளும் உள்ளன. இது சருமத்தின் இயற்கையான எண்ணெய்களை கட்டுப்படுத்த உதவுகிறது மற்றும் நீங்கள் அதிகப்படியான எண்ணெயிலிருந்து விடுபடவும் உதவும். இந்த இயற்கை முகம் அழகு குறிப்பு சுருக்கங்கள் மற்றும் நேர்த்தியான கோடுகள் போன்ற வயதான அறிகுறிகளைக் குறைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஒரு தக்காளியை கூழ் போல் செய்து உங்கள் முகத்தில் சமமாக தடவவும். இதை 15 நிமிடங்கள் உலர அனுமதிக்கவும், வெதுவெதுப்பான நீரில் கழுவவும், இயற்கையாக ஒளிரும் சருமத்தை இது வெளிப்படுத்தவும்.

**பிளாக்ஹெட்ஸ்– வெள்ளரி மற்றும் எலுமிச்சை**

நீங்கள் எல்லோரும் பிளாக்ஹெட்ஸ் உடன் போராடுகிறீர்களா ? இவை உங்கள் தோலை மந்தமாக்கவும் சோர்வாகவும் வைக்கும். இயற்கையாகவே பிளாக்ஹெட்ஸிலிருந்து விடுபடவும், பிரகாசமான மற்றும் தோற்றமளிக்கும் தோல் பொலிவை பெறவும், வெள்ளரி மற்றும் எலுமிச்சை சாறு கலவையைப் பயன்படுத்துங்கள். வெள்ளரிக்காய் மற்றும் எலுமிச்சை சாற்றை சம அளவு எடுத்து குளிக்கும் முன் முகத்தில் தடவவும். அதைக் கழுவுவதற்கு முன்பு 10 நிமிடங்கள் இருக்கட்டும். இந்த இயற்கையான முறையை தவறாமல் பயன்படுத்துவது உங்கள் சருமத்தை பிரகாசமாக்கும் மற்றும் பிளாக்ஹெட்ஸ் குறைக்கும். இது அனைத்து தோல் வகைகளுக்கும் ஏற்றது.

**திறந்த துளைகளுக்கு ஆப்பிள்**

விரிவாக்கப்பட்ட துளைகள் உங்கள் சருமத்தை முதிர்ச்சியடையும், எண்ணெய் மிக்கதாகவும், தோல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் அழுக்குகளை ஈர்க்கும். முகத்தில் மெல்லிய ஆப்பிள் துண்டுகளை வைத்து 15 நிமிடங்கள் விட்டு விடவும். அல்லது நீங்கள் ஆப்பிள் வினிகர், தேன் மற்றும் முல்தானி மிட்டி மற்றும் ரோஸ் வாட்டர் ஆகியவற்றை தடவலாம். இது உங்கள் தோலில் 30 நிமிடங்கள் உலர விடவும், பின்னர் கழுவவும். ஆப்பிள் உங்கள் முகத்திலிருந்து அதிகப்படியான எண்ணெயையும், துளைகளை மூடி, சருமத்தை இறுக்கி, ஆரோக்கியமாகவும், கவர்ச்சியாகவும் தோற்றமளிக்க வைக்கும்.

**இறந்த சருமத்திலிருந்து விடுபட பப்பாளி**

பப்பேன் எனப்படும் இயற்கையான நொதியால் உட்செலுத்தப்பட்ட பப்பாளி இயற்கையாகவே சருமத்தை மென்மையாக்கும். பழுக்காத பப்பாளிப்பழத்தில் அதிக அளவு பப்பேன் உள்ளது. எனவே இறந்த சரும செல்கள் மற்றும் பிற அசுத்தங்களை அகற்றவும் பயன்படுத்தலாம். உணர்திறன் வாய்ந்த தோல் வகை உள்ளவர்கள் பப்பாளிப்பழத்தையும் பயன்படுத்தலாம், ஏனெனில் இது எதிர்வினையைத் தூண்டும் வாய்ப்பு குறைவு. ரு கப் பப்பாளி சதைகளை வெளியேற்றி, 1 தேக்கரண்டி புதிய அன்னாசிப்பழத்துடன் கலந்து மென்மையான கலவையை உருவாக்கி முகத்தில் தடவவும். பின்னர் கழுவுவதற்கு முன் 5 முதல் 15 நிமிடங்கள் வரை உலர விடவும்.

**எரிச்சலூட்டப்பட்ட சருமத்தை அமைதிப்படுத்தும் கற்றாழை!**

ஆரோக்கியமான, ஒளிரும் சருமத்திற்கு கற்றாழை. எரிச்சலூட்டப்பட்ட சருமத்தை அமைதிப்படுத்துவது முதல் ஊட்டச்சத்து அளிப்பது வரை, கற்றாழை ஜெல்லைப் பயன்படுத்துவது ஒரு இயற்கை முறை. ஒரு சிறிய வெட்டு, முகப்பரு, அரிக்கும் தோலழற்சி அல்லது வேறு ஏதேனும் தோல் பிரச்சினையாக இருந்தாலும், சில கற்றாழை ஜெல்லை ஒரு நாளைக்கு இரண்டு முறை பயன்படுத்தினால் அது குணப்படுத்தும்.



# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியும், புலம்பெயர்வோரும்



இலங்கையின் பொருளாதாரம் பெருந்தோட்டப் பயிர்செய்கைகளான தேயிலை, இறப்பர், கொக்கோ, கிராம்பு போன்றவையே பிரதான வருவாயாக விளங்கியது. அண்மைக் காலங்களில் பெருந்தோட்டங்கள் சிங்கள மக்களுக்கு குடியேற்ற கிராமங்களாக பிரித்துக் கொடுக்கப்பட்டதனாலும், முறையற்ற அரசின் திட்டங்களாலும் அவ்வருமானம் வீழ்ச்சியடைந்ததுடன், தற்போது இலங்கையின் பிரதான வருமானமாக வெளிநாட்டு பணியாளர்கள் ஊடாகவே கிட்டப்படுகின்றது.

குறிப்பாக மத்திய கிழக்காசிய நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக பணிபுரிவோரின் ஊடாகவே பெறப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத்தவிர சுற்றுலா, தேயிலை, புடவை போன்றவற்றில் இருந்து கணிசமான வருவாய் கிட்டுகின்றன. தற்போது இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது குடும்பத்தாருக்கு உதவி வரும் நிதி போன்றனவும் இலங்கைக்கான ஒரு வருவாய் மார்க்கமாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. சுற்றுலாத்துறையும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பங்கு வகிக்கின்றது. எனினும் கடந்த ஈஸ்டர் குண்டுவெடிப்புத் தாக்குதல் மற்றும் கொவிட் அச்சுறுத்தல் நிலைமை காரணமாக சுற்றுலாத்துறையும் வீழ்ச்சி கண்டுள்ளது. உள்நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவுப்பொருட்களின் விலைகளின் உயர்வும், எரிபொருட்களுக்கான செலவு அதிகரிப்பும் சுற்றுலாத்துறையினரையும் தாக்கியுள்ளது. அவர்களின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலை இன்னமும் கடந்த காலங்களைப் போல சீராகவில்லை.

இலங்கை பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் செழிப்பான நிலையில் இருப்பதனால், மீண்டும் இலங்கைத் திரும்பி தமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் அழைப்பு விடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த நடவடிக்கை தொடர்பில் அரசிடம் போதிய தெளிவும் அவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பிலும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் இல்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கையைப் பொறுத்தவரையில் இச்சட்டத்தினால் தமிழினம் அதிகம் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளதையும் கருத்திற்கொண்டு புலம்பெயர் தமிழர்கள் இங்கு வந்து முதலீடு செய்வதில் உடன்பாடற்ற நிலையும் தொடர்கின்றது. உலகம் முழுவதும் பரவிய கொவிட் வைரசிற்குப் பின்னரான காலங்கள் இலங்கைக்கு மிக மோசமான காலகட்டமாக அமைந்துள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இவ்விடயம் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இலங்கை வாழ் மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இலங்கையின் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும் இப்பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. நிலையான பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்படாமையும், அரசியலில் ஏற்பட்ட ஸ்திரத்தன்மையும் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளன. ஊழல் மோசடிகளும் தாக்கத்தை செலுத்தும் காரணியாக அமைந்துள்ளது.

பழங்காலம்முதலேஒன்பது இரத்தினங்கள், யானைத் தந்தம், முத்துகள் போன்ற பொருட்களுக்குப் புகழ்பெற்ற இலங்கை, குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களுக்கு பெயர் பெற்று விளங்கியது.

இலங்கைக்கு 1948யில் விடுதலை பெற்ற பின்னர், முதலாளித்துவ பொருளாதாரத்தைப் சிறிது காலமே பின்பற்றிய போதிலும் அது ஆசியாவிலே மிக முன்னேற்றகரமான பற்பல சமூக நல நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. ஆனால் 1956 ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் முழுக்க முழுக்க சமவுடமை பொருளாதாரத்தையே கைகொள்ளத் தொடங்கியது.1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர், தனியார்மயப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதுடன், சந்தைப் பொருளாதாரக் கொள்கையையும், ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தையும் நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது மிகை இயங்குநிலையிலுள்ள துறைகளாவன, உணவுப்பொருள் உற்பத்தி, ஆடை உற்பத்தி, உணவும் குடிவகைகளும், தொலைத் தொடர்பு, காப்புறுதி, வங்கித் துறைகளாகும். 1996 அளவில், பெருந்தோட்டப் பயிர்கள் ஏற்றுமதியில் 20% ஐ மட்டுமே கொண்டிருந்தன (1970 இல் 93%), அதேநேரம் ஆடைகள் ஏற்றுமதியின் 63% ஆக இருந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), 1990களில் சராசரியாக 5.5% ஆண்டு வளர்ச்சியைப் பெற்றது. வறட்சியும், சீர்கெட்டுவந்த பாதுகாப்பு நிலையும், 1996இல் வளர்ச்சியை 3.8% க்குத் தாழ்த்தும் வரை இது நீடித்தது. 1997-2000 காலப்பகுதியில், சராசரி 5.3% வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மீட்சி காணப்பட்டதெனினும், மின்சாரப் பற்றாக்குறை, வரவுசெலவுப் பிரச்சினைகள், உலகப் பொருளாதார மந்த நிலை, மற்றும் தொடர்ந்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள் என்பவற்றால், 2001ல் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை ஒரு பொருளாதார ஒடுக்கத்தைக் காண நேர்ந்தது.

எனினும் 2001ல், கையெழுத்து இடப்பட்ட, இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாகப் பொருளாதாரம் தேறி வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. கொழும்பு பங்குச் சந்தை 2003ல் ஆசியாவிலேயே ஆகக்கூடிய வளர்ச்சியைப் பெற்றிருப்பதாக அறிவித்துள்ளது. தற்போது, தென்னாசியாவிலுள்ள முக்கிய நாடுகளிடையே அதிக தனி நபர் வருமானத்தைக் கொண்ட நாடு இலங்கையாகும்.

தற்போது வெளிநாட்டு பணியாளர் ஊடான வருவாயே இலங்கை பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகியுள்ளது. கல்வி கற்காதோர் முதல், உயர் தரம் கற்றோர் வரை ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் எளிதாக தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு துறையாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைந்துள்ளதால், பெரும்பாலானோரின் தெரிவு வெளிநாட்டு வேலை வாய்ப்பாகவே மாறி வருகின்றது. உள்நாட்டில் தொழில் புரிவோரும் அத்தொழில்கள் ஊடாக போதிய வருவாயை ஈட்ட முடியாத நிலையும், இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் விலைவாசி அதிகரிப்பிற்கு முகம் கொடுக்க முடியாத நிலையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமாக இலங்கை சமூகம் மாற்றமாகி வருகிறது. இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பில் பெரும்பாலானோர் வீட்டுப் பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்தியக் கிழக்காசிய நாடுகளில் இலட்சக் கணக்காணோர் வீட்டு பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர்.

மத்திய கிழக்காசிய நாடுகளைத் தவிர உலகின் பலவேறு நாடுகளிலும் வீட்டுப் பணியாளர்களாக இலங்கையர் தொழில் புரிகின்றனர். இவ்வாறான வெளிநாட்டு வேலை வாய்ப்பின் ஊடாகவே தற்போதைய இலங்கையின் பிரதான பொருளாதாரம் ஈட்டப்படுகின்றது. தற்போது அரச துறையில் வேலைசெய்வோரும் ஐந்து வருட விடுமுறையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லமுடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

2009ம் ஆண்டுக்கு முன்பு இலங்கையின் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்த வடக்கிழக்கு பகுதிகளைத் தவிர்ந்த ஏனையப் பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமே வெளிநாட்டு பணியாளர்களாக அதிகம் இருந்தனர். ஆனால் இன்று இந்நிலைமை மாற்றம் பெற்றுள்ளது. நாட்டிலுள்ள மூவின மக்களும் பெருவாரியாக வெளிநாட்டுத் தொழிலைப் பெறுவதற்காக காத்திருக்கின்றனர். கடவுச்சீட்டு அலுவலகங்கள் மக்கள் தொகையால் நிரம்பி இருப்பதைக் காணமுடிகிறது.

தற்போது வருவாயை ஈட்ட போதுமான தொழில் வாய்ப்பு இல்லாமையாலும், இலங்கையில் செலவீனங்களுக்கு முகம் கொடுக்க முடியாமையினாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசாங்கமும் வெளிநாடுகளுக்கு சென்று பணிப்புரிவதன் ஊடாக கிட்டும் வருவாயை கவனத்தில் கொண்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்பையே ஊக்குவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டு செய்திகள்

## வலுவாக திரும்பி வருவோம்! இலங்கை அணி பயிற்சியாளர்

இலங்கை அணியின் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் தங்கள் அணி வலுவாக திரும்பி வரும் என தெரிவித்துள்ளார்.



நடப்பு உலகக்கோப்பையில் பெர்த்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாயசத்தில் தோல்வியடைந்தது.

முன்னதாக அயர்லாந்தை 9 விக்கெட் வித்தியாசத்தில் மிரட்டலாக வீழ்த்திய இலங்கை பெர்த்தில் தோல்வியை சந்தித்தது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அக்டோபர் 29ஆம் திகதி சிட்னியில் நடக்க உள்ள போட்டியில் இலங்கை அணி நியூசிலாந்தை எதிர்கொள்கிறது. இந்த நிலையில் இலங்கை அணியின் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் கூறுகையில்,

'அவுஸ்திரேலியா விளையாட்டின் முக்கியமான விடயம் என்னவென்றால், நாங்கள் மீண்டும் ஒருங்கிணைந்து அடுத்த ஆட்டத்திற்குத் தயாராகி, வலுவாகத் திரும்பி வருவதை உறுதிசெய்வதுதான்' என தெரிவித்துள்ளார்.

## நெதர்லாந்து அணிக்கு 180 ஓட்டங்கள் வெற்றி இலக்கு!

இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சுப்பர் 12 சுற்றின் இன்றைய போட்டியில் நெதர்லாந்து அணிக்கு இந்திய அணி 180 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி 179 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக விராட் கோலி 62 ஓட்டங்களையும், சூர்யகுமார் யாதவ் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் நெதர்லாந்து அணியின் பவுல் வென் மீகெரென் 32 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

## இலங்கை மகளிர் கிரிக்கெட்: ஹஷான் திலகரத்ன இராஜினாமா

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியை ஹஷான் திலகரத்ன இராஜினாமா செய்துள்ளார்.

பங்களாதேஷ் மகளிர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியை ஏற்றுக் கொண்ட நிலையில் அவர் இராஜினாமா செய்துள்ளார்.

பங்களாதேஷ் மகளிர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நவம்பர் 1ஆம் திகதி முதல் ஹஷான் திலகரத்ன, பொறுப்பேற்கவுள்ளார்.




## இலங்கை வீரர் ஒருவருக்கு அவுஸ்திரேலியாவில் சத்திரசிகிச்சை

ரி20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக அவுஸ்திரேலியா சென்ற வீரர் ஒருவருக்கு அன்று (29) சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போட்டியின் போது உபாதைக்கு உள்ளான இலங்கை வேக பந்து வீச்சாளர் துஷ்மந்த சமிரவே இவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ரி20 உலகக் கிண்ணப் கிரிக்கெட் போட்டியின் போது ஏற்பட்ட உபாதை காரணமாக, அவர் அந்த போட்டியில் இருந்து விலகினார்.

அதன்படி அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நாளை காலை அவருக்கு சத்திரசிகிச்சை நடைபெற உள்ளது.




## இலங்கை அணியில் இணையவுள்ள புதிய வீரர்கள் !

இலங்கை அணிக்கு மேலும் புதிய வீரர்கள் மூவர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் தொடர்ச்சியாக உபாதைக்குள்ளாகின்றமையினால் மேலும் 03 வீரர்கள் அவுஸ்திரேலியா நோக்கி புறப்படவுள்ளனர் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, விக்கெட் காப்பாளர் நிரோஷன் திக்வெல்ல, வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ மற்றும் மதீஷ பத்திரன ஆகியோரே அவுஸ்திரேலியா நோக்கி புறப்படவுள்ளனர்.




## பினுர பெர்னாண்டோவுக்கு பதில் அசித்த பெர்னாண்டோ !

அசித்த பெர்னாண்டோவை இலங்கை அணியில் இணைத்து கொள்ள ஐசிசி அனுமதி வழங்கியுள்ளது.

பினுர பெர்னாண்டோவுக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவர் நாடு திரும்பியுள்ளார்.

அவருக்கு பதிலாக அசித்த பெர்னாண்டோவை அணியில் இணைக்க ஐசிசி அனுமதி வழங்கியுள்ளது.



# உலக பார்வை



## 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வறட்சியை சந்தித்த கென்யா!

4 பருவங்களாக மழை பொய்து போனதால் 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோசமான வறட்சியை கென்யா சந்தித்துள்ளது.

இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு பசி, பட்டினியால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

மனிதர்களுக்கே அடுத்த வேளை உணவிற்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில், கால்நடைகளை வளர்ப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

அங்குள்ள மாடுகள் அனைத்தும் போதிய தீவனமின்றி உடல் மெலிந்து எலும்புகள் வெளியே தெரியும் அளவுக்கு மோசமான நிலையில் உள்ளது.



## இந்திய வம்சாவளி பெண் கனேடிய அதிகாரி அதிரடியாக பதவி நீக்கம்!

பிராம்டன் நகர மேயர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்த இந்திய வம்சாவளி பெண்மணி நிக்கி கவுர் (Nikki Kaur), இதுவரை தொடர்ந்த பதவியில் இருந்தும் அதிரடியாக நீக்கியுள்ளனர். குறித்த விவகாரம் தொடர்பில், சட்ட நடவடிக்கை முன்னெடுக்க நகர மேயர் போட்டியில் வெற்றிவாய்ப்பை இழந்த நிக்கி கவுர் (Nikki Kaur) முடிவு செய்துள்ளார்.

பிராம்டன் நகர பொருளாதார வளர்ச்சி, திட்டமிடல் உள்ளிட்ட துறைகளின் இயக்குனராக பொறுப்பு வகித்து வந்துள்ளார் இந்திய வம்சாவளி கனேடியரான நிக்கி கவுர்.

பிராம்டன் நகர நிர்வாக ஊழல்



இந்த நிலையில் பிராம்டன் மேயர் பிரவுனுக்கு எதிராக தேர்தலில் களம் கண்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். ஆனால் அதன் பின்னர் நிக்கி கவுர் (Nikki Kaur) அதுவரை வகித்துவந்த இயக்குனர் பதவியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

குறித்த நடவடிக்கை சட்டவிரோதமானது எனவும் குறிவைத்து பதிலடி அளிப்பது போன்றது என பிராம்டனின் செயல் சட்டத்தரணி டயானா சூஸ் என்பவருக்கு அளிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

பிராம்டன் நகர நிர்வாகம் ஊழலில் ஈடுபடுவதாக 2021ல் முதன்முறையாக வெளிச்சத்துக்கு கொண்டுவந்த நிக்கி கவுர் (Nikki Kaur), அப்போது பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன்பின்னர் பின்னர் மீண்டும் அவர் உரிய பதவிக்கு கொண்டுவரப்பட்டார்.

இந்த நிலையில் விடுப்பு எடுத்து சென்ற நிக்கி கவுர் (Nikki Kaur), நகர மேயர் பிரவுனுக்கு எதிராக போட்டியிட்டார். எனினும் வெற்றி வாய்ப்பை இழந்தார். இந்த நிலையிலேயே மீண்டும் நிக்கி கவுர் தமது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, கவுர் (Nikki Kaur) நீக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் மேயர் அலுவலகம் கருத்து கூற மறுத்துள்ளதுடன், இது தனிப்பட்ட விவகாரம் எனவும் குறிப்பிட்டுள்ளது. முதன்மை நிர்வாக அதிகாரிக்கு நகரின் வளர்ச்சி தொடர்பில் முடிவெடுக்க முழு அதிகாரம் உண்டு என குறிப்பிட்டுள்ள மேயர் பிரவுன், அவர் எங்கள் சக ஊழியர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

## உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அதிர்ச்சி அறிக்கை

2030 ஆம் ஆண்டுக்குள் 50 கோடி பேருக்கு வாழ்வியல் தொடர்பான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக உலக சுகாதார அமைப்பு (WHO) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உடல் செயல்பாடுகளின் உலக நிலவரம் 2022 அறிக்கையை ஐ.நாவின் ஒரு அங்கமான உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை 194 நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

2020 முதல் 2030 வரையில் உலக அளவில் 50 கோடி மக்களுக்கு உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய், வாழ்வியல் தொடர்பான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக இதில் கூறப்பட்டுள்ளது.இதனால் உலக அளவில் ஆண்டுக்கு ரூ.2.21 லட்சம் கோடி அளவுக்கு கூடுதல் மருத்துவ செலவுகள் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர்க்க மக்களை உடற்பயிற்சி, இதர செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்ய அரசுகள் ஊக்குவிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறியிருக்கிறது.

World Health Organization

## மீண்டும் ஹைப்பர் சோனிக் ஏவுகணையை சோதனை செய்த பிரபல நாடு!

அமெரிக்கா ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்லும் ஹைப்பர் சோனிக் ஏவுகணையை மீண்டும் சோதனை செய்துள்ளது.



இந்த தகவலை அந்நாட்டின் ராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

மேலும் ராணுவம் - கப்பற்படை கூட்டுத் திட்டத்தை ஆதரிப்பதற்காக ஹைப்பர்சோனிக் ஆயுத ஆராய்ச்சிக்கான தரவுகளைச் சோதிக்கவும் சேகரிக்கவும் வடிவமைக்கப்பட்ட 11 வெவ்வேறு சோதனைகளை ராக்கெட் கொண்டு சென்றதாகவும் அந்நாட்டு கடற்படை தெரிவித்துள்ளது.

கடல் மற்றும் நிலம் சார்ந்த ஹைப்பர்சோனிக் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது சோதனை இதுவாகும். முதல் சோதனை அக்டோபர் 2021 இல் நடத்தப்பட்டது.

## உணவு வங்கிகளில் குவியும் கனேடியர்கள்

கனடாவில் உணவு வங்கிகளில் குவியும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், உணவு வங்கி பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையிலான நபர்கள் உணவு வங்கிகளின் உதவியை நாடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பணவீக்க அதிகரிப்பு குறைந்த அளவான சமூக உதவிகள் ஆகிய காரணிகளினால் இவ்வாறு உணவு வங்கிகளில் தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கனடிய உணவு வங்கி குறித்த நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் 1.5 மில்லியன் பேர் உணவு வங்கிகளில் உதவியை நாடியுள்ளனர்.இது கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது 35 வீத அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

நிலையான வருமானம் பெறும் சிரேஸ்ட பிரஜைகள், குறைந்த வருமானம் ஈட்டும் மாணவர்கள் போன்றவர்கள் அதிகளவில் பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவு வங்கிகளில் பயன் பெற்றுக் கொண்டவர்களில் மூன்றில் ஒரு வீதமானவர்கள் அதாவது 500,000 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முழுவதும் காணப்படும் 4750உணவு வங்கிகள் தொடர்பில் இந்த தகவல்கள் திரட்டப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பு முகாம் !

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்விக்கோட்டத்தின் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (GMMS) தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அதிபர் எம்.ஐ.எம் இல்லியாஸின் வழிகாட்டலிலும் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலிலும் பல செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அதன் தொடர்ச்சியாக இன்று தொடக்கம் இம்மாத இறுதிவரை வாசிப்பு முகாம் (Reading Camp) பாடசாலையில் நடைபெற்று வருகின்றது. இந்த முகாமில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாளிகைக்காடு கமு/கமு/சபீனா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.அஸ்மி, பாடசலை பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப்பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.






# "மாளிகை மரகதங்கள் –2022"

மீஸானின் பலதுறைகளில் பிரகாசித்தவர்களை பாராட்டி கௌரவிக்கும் "மாளிகை மரகதங்கள் –2022" பிரமாண்டமாக நடைபெற்றது.

மாளிகைக்காடு பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழத்திற்கு மாவட்ட அளவில் முதலிடம் பெற்று தெரிவானோர் அடங்களாக பலதுறைகளில் பிரகாசித்தவர்களை பாராட்டி கௌரவிக்கும் மாளிகை மரகதங்கள் –2022 நிகழ்வு அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அல்– ஹிசைன் பழைய மாணவர்களின் ஒருங்கமைப்பில் கிழக்கு மாகாண கனனி தொழில்நுட்ப பேரவை பணிப்பாளரும், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹிதா உமரின் தலைமையில் மாளிகைக்காடு அல்– ஹிசைன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் விமர்சையாக இடம்பெற்றது.

சாதனையாளர்களும், அதிதிகளும் கலாச்சார அம்சங்களுடனான முறையில் வரவேற்கப்பட்டு இடம்பெற்ற இந்நிகழ்வில் மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதான அதிதியாகவும், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹீதுல் நஜீம் முன்னிலை அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மேலும் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம். அஸ்மீர், வீதி அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், உதவிக்கல்வி பணிப்பாளர்களான ஜிஹானாஆலிப், நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் STD பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டாக்டர் தில்ஷான் நிஸாம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கல்முனை வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதானிகள், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் நிறைவேற்றுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், அல்– ஹிசைன் பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.








இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 30.10.2022 அன்று வெளியிடப்பட்டது.